# வெளிச்சம்

கலை, இலக்கிய சமூக இதழ்

☐ வெளியீடு:
விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்

☐ உருவாக்கம்:
ஆசிரியர் குழு

☐ ஓவியங்கள்:
தயா, கோபாலி

☐ அச்சு:
ம. மரியதாஸ்

☐ இதழமைப்பு:
இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

தொடர்புகட்கு:

**"வெளிச்சம்"**

விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்
நடுவப்பணியகம்
கோண்டாவில்,
தமிழீழம்.

## தலைவாசல்

**இதழ்: 37** **வைகாசி: 1995**

வெளிச்சத்தை விரும்பும் விடுதலை நெஞ்சங்களே!

''சமாதானத்துக்காகக் காத்திருந்தோம் சரிப்பட்டு வரவில்லை'' என்றும் ''அமைதிக்காக அடைகாத்தோம் அது பொரிக்கவில்லை'' என்றும் இங்கு சிலர் அங்கலாய்க்கின்றனர். இதன் அர்த்தமென்ன? சிங்கள அரசிடம் இவர்கள் எப்படியான அமைதியையும், சமாதானத்தையும் எதிர்பார்க்கின்றனர். பேசிப் பெறுவதும், கேட்டு வாங்குவதுமே சமாதானம் என்றால், போராடியே பெறவேண்டிய ''தாயகமீட்பு'' என்ற தாரக மந்திரத்தின் நிலை என்ன?

ஸ்ரீலங்கா அரசுகள் எதுவானாலும் பேச்சு வார்த்தை மேசையில் பேசி எங்கள் இனத்தின் இறைமையை ஏற்றுக் கொள்ளுமா? எங்கள் நிலப்பரப்பு எங்களுக்கே என்று எழுதித்தருமா? எம்மினத்துக்கேயுரிய தனித்துவமான பண்பாட்டுப் பேணலுடன் வாழ்வமைக்க வழிவிடுமா? ஆம் என்று பதிலிருக்குமானாற் தானே அமைதியையும், சமாதானத்தையும் பேச்சு வார்த்தை மேசையில் எதிர் பார்க்க முடியும். அது இல்லையென்றாகி விட்டால், அடுத்து என்ன?

சலுகைகளை, உரிமைகள் என்றமாரிசங்களில் மயங்கியுள்ளவர்களுக்கே வெடிச்சத்தம் கேட்காத பூமி விடுதலை பெற்ற நாடாகத் தெரியும். பெற்றோலும் வேறு பொருட்களும் சுதந்திரத்தின் தோற்றுவாயாகத் தெரியும். ஆனால், பூரண விடுதலையென்பது இது அல்ல. அந்த விடுதலையை எந்தச் சிங்கள அரசும் எமக்குத் தரப்போவதில்லை.

இந்த நிலையில் நாங்கள் என்ன செய்ய லாம்? போராட்டமே சத்தியமானதும், சாத்தியமானதும் என்பதை ஏற்றுக் கொண்டு போரைவிரைவுபடுத்துவதே நிரந்தர அமைதிக்கானதும், நிலையான சமா தானத்துக்குமான வழி என்பதைத் தெளிந்து கொள்ள வேண்டும்.

சரி, அப்படியாயின் பேச்சுவார்த்தை களில் புலிகள் ஏன் கலந்து கொண்டனர்? சிங்கள அரசுகள் உலகத்தை ஏமாற்றத் திட்டமிட்டு தாங்களேதோ சமாதானப் பிரியர்கள் என்று காட்டப் புறப்பட்ட போது, நாங்களும், எங்கள் நியாயத்தை யும், அதிலிருக்கும் தர்மத்தையும், உலகுக் குச் சொல்லவும், எதிரியின் தந்திரோ பாயங்களை தவிடு பொடியாக்கவுமே பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள நேரிடு கின்றது. உலக நாடுகளென்பது மனித தர் மத்தையும், இனங்களின் விடுதலையையும் ஏற்றுக்கொண்டுள்ள கூட்டமல்ல. உல கத்தின் முற்காற் பங்கு நாடுகளின் அரசு கள் அடக்குமுறை அரசுகளே. மனித உரி மைகளை மீறும் மகுடாதிபதிகளே! இவர் கள் அடக்குமுறை அரசுகளின் பக்கமே நிற்பார்கள். ஏனென்றால் ...... இவர்களே அடக்கு முறையாளர்கள்தானே. இவர் களையெல்லாம் மீறியே எமது போராட் டத்தை நாம் முன்னெடுக்க வேண்டும்.

உயர் விலை கொடுத்துப் போராடும் எம் தேசத்திலிருந்து 'பீ.பீ.சி ஆனந்திக்கு .. படித்தவர்கள் எனப்படும் சிலர் வழங்கிய செவ்விகள் எம்மைத் திகைக்க வைத்தன. கல்விப் பெருந்தகைகள் எனக் கருதப்படும் இவர்களிடமிருந்து வந்த அறியாமை இருளை என்னென்று அழைப்பது? பய மென்பதா? நாட்டுப் பற்றின்மை என்பதா? அல்லது இவர்களைப் பார்த்துப் பரிதாபப் படுவதா? சிரிப்பதா? என்று முடிவெடுக்க முடியாதிருக்கிறது.

நேற்று நிலத்தையும் நீலக் கடலையும் கட்டுப்படுத்தும் வல்லமை பெற்றோம்.

இன்று எதிரியின் ஆகாய பலத்தையே அழிக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளோம். இத் தனைக்குப் பின்பும் மாய மான்களுக்கு ஆசைப்படுவது போராட்டத்தையே படு குழிக்குள் தள்ளி விடும். போராட்டத்தி லிருந்து ஒருவர் கூட ஒதுங்கவில்லை என்று எதிரிக்கு எப்படிச் சொல்லலாம்?

அந்த வழியைச் சிந்திப்போம்.........

---

**கலை இலக்கியப் படைப்பாளிகளே!**

வெளிச்சத்தின் நான்காம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழை விரைவில் வெளியிடும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அதிக பக்கங்களில் வெளிவரவிருக்கும் சிறப்பிதழுக்கு சிறுகதைகள், கவிதைகள், கலை, இலக்கியக் கட்டுரைகள் மற்றும் விமர்சனக் கட்டுரைகளைக் காலந்தாழ்த்தாது எமக்கு வழங்கி ஒத்துழைக்கும் படி கேட்கின்றோம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

**வெளிச்சம், விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம், நடுவப்பணியகம், கோண்டாவில்.**

அதிர்ஷ்டம் எப்போதும் என் பக்கமில்லை
என்றாலும்
அன்று என்னோடிருந்தது.
அப்போது இராஜவீதியில் இருந்தேன்.
வானத்தில்......
மின்னலடித்தது.
மேலே பார்த்தேன்
காலையில் யாரோ கதைத்துக் கொண்டது
காதில் உறைத்தது.
''விசயம் விளங்கியது''
ஆகாய ஊர்தியை
தமிழன் சுட்டு விழுத்துவதை
பார்க்கும் பாக்கியம் சித்தித்தது.
மேனிச்சுமை குறைந்து மிதந்தேன்
காற்றில் கைவீசி நடந்தேன்
முகிலைக் கடந்து நிலவைத் தொட்டேன்.
என்ன நடந்தது என்னில்?
அசாதாரணம் தான்
என்னால் முடிந்தது அப்போது
சுட்டது நானில்லை
சுட்ட இடத்திலும் நானில்லை
நானே விழுத்திய நடப்பு எனக்கு.
என் இளவல் ஒருவனாலும்
இயலுமென்பதே
என்திமிர்.
இனி எவருக்கு நேரேயும் நிமிர்வேன்.
அந்தநாளில் நானும் இருந்தேன்
என் ஜீவிதத்துக்கும் அர்த்தம் உண்டு
அதுபோதும்.

— மாலிகா



## சலுகைகளுக்காக... எவரிடமும் நாம் கை நீட்ட மாட்டோம்.

**எனது அன்புக்குரிய மக்களே!**

இந்த தற்காலிக போர்நிறுத்த நடவடிக்கையின் பயனாக எமது பிரச்சனைக்கு ஒரு இறுதியான அரசியற் தீர்வு ஏற்படும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. இனவெறி கொண்ட சிங்கள - பௌத்த தலைமைக்கு அப்படி திடீரென மனமாற்றம் ஏற்படுமென நாம் எதிர்பார்க்கவில்லை. தமிழருக்கு நீதி வழங்க வேண்டும் என்ற தார்மீக சிந்தனைக்குப் பதிலாக, தமிழர்களை மீண்டும் ஏமாற்றி ஆயுதப் புரட்சிப் போராளிகளை அடிபணியச் செய்ய வேண்டும் என்பதே அரசின் அந்தரங்கத் திட்டமாகும். 35 வருட அரசியல் வரலாற்றில் மீண்டும் மீண்டும் ஏமாந்து போன கசப்பான அரசியல் வரலாற்றுப் பாடங்களில் நாம் நிறையக் கற்றுத் தெளிந்திருக்கிறோம். ஆகவே பேச்சுக்கள் என்ற இந்த ராஜதந்திரப் பொறிக்கிடங்கில் நாம் சிக்குப்படப் போவதில்லை என்பதை நான் உறுதியாக திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன்.

எமது விடுதலைப் போராட்டத்தில் நாம் அளப்பரிய தியாகங்களைச் செய்திருக்கிறோம். தாங்க முடியாத துன்ப, துயரங்களைஅனுபவித்திருக்கிறோம். ஆயிரமாயிரம் அப்பாவி மக்களின் உயிர்களை பறிகொடுத்திருக்கிறோம். எமது வீடுகள், சொத்துக்கள், செல்வங்களை இழந்திருக்கிறோம். பெருந்தொகையான இளம் போராளிகளை களத்தில் பலிகொடுத்திருக்கிறோம். சகிக்க முடியாத அளவிற்கு நாம் அவமானப் படுத்தப்பட்டிருக்கிறோம். சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

இத்தனை கொடுமைகளுக்குப் பின்னர், இத்தனை உயிரழிவுகள், பொருளழிவுகளுக்குப் பின்னர், இத்தனை வீரச்சாவுகளுக்குப் பின்னர் நாம் சிங்கள அரசிடம் மண்டியிட்டு சலுகைகளுக்காக கைநீட்டப் போவதில்லை.

தர்மமும், உண்மையும் இறுதியில் வெற்றியளித்து, தமிழ்த் தாயில் கருக்கொண்டுள்ள வரலாற்றுக் குழந்தையான தமிழீழம் என்றோ ஒருநாள் பிரசவமெடுக்கும் என்பது எனது நம்பிக்கை.

எம்மிடம் ஆத்ம பலமும், ஆயுத பலமும் இருக்கிறது. மக்கள் பலமும் எமது கரங்களைப் பலப்படுத்துமானால் எமது இலட்சியம் வெற்றியடைவதை யாராலும், எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை உறுதியுடன் கூற விரும்புகிறேன்.



தமிழீழத் தேசியத் தலைவர்
திரு.வே.பிரபாகரன் அவர்கள்

'ஈழத்தமிழர் வரலாறு' என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு. ப. புஷ்பரட்ணம் அவர்கள் எழுதும் கட்டுரை வெளிச்சம் இதழில் தொடராக வருகிறது. இந்தத் தொடரின் தொடர்ச்சி இந்த இதழில் பிரசுரமாகிறது.

# 5

# ஈழத்தமிழர் வரலாறு

ப.புஷ்பரட்ணம்

## கல்வெட்டுக்கள் கூறும் தமிழர் வரலாறு:

கி.மு. 3ஆம் நூற்றாண்டில் இருந்து இலங்கை மக்களது வரலாற்றை தொடர்ச்சியாக அறியக்கூடிய நம்பகரமான சான்றுகள் ஓரளவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. இதற்கு வரலாற்றுச் சம்பவங்களைக் கல்வெட்டில் எழுதி வைக்கும் மரபு தோன்றியமை ஒரு காரணமாகும். வரலாற்றாய்வில் இலக்கியங்களை விட கல்வெட்டுக்கள் கூறும் வரலாறு நம்பகரமானவையாக கொள்ளப்படுகிறது. ஆதிகால இலக்கியங்கள் பெரும்பாலும் சம்பவங்கள் நடைபெற்றுப் பல ஆண்டுகளின் பின்னர் தொகுத்து எழுதப்பட்டவையாகும். இதில் இலக்கியங்களை எழுதியோர் வாழ்ந்த காலச் சூழ்நிலை. அவர்களின் இன, மத உணர்வுகள் என்பன செல்வாக்குச்செலுத்த இடமுண்டு. இதற்கு இலங்கை வரலாறு தொடர்பாகத் தோன்றிய பாளி, சிங்கள இலக்கியங்கள் சிறந்த எடுத்துக் காட்டாகும். கல்வெட்டுக்கள் பெரும்பாலும் சம்பவம் நடந்த காலத்தில் எழுதப்படுபவை. அதில் திரிபுகள், பக்கச் சார்புகள், கட்டுக்கதைகள் என்பன இடம் பெற வாய்ப்பில்லாது போகின்றது. மாறாக இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள உண்மைக்கு மாறான வரலாற்றை இனங்காண உதவுகின்றன. உதாரணமாக மகாவம்சம் கூறும் காலப்பகுதிக்குரிய வரலாற்றை அக்காலப் பகுதிக்குரிய கல்வெட்டுக்கள் கூறும் வரலாற்றோடு ஒப்பிட்டால் மகாவம்ச ஆசிரியரின் இன, மத உணர்வு எந்தளவுக்கு அவர் எழுதிய நூலை ஒரு இனத்துக்குரிய வரலாறாக மாற்றியுள்ளது என்ற உண்மையை தெளிவாக இனங்காண முடிகிறது. இதனால் ஈழத்தமிழர் வரலாற்றை ஆராய முற்படும் ஒருவர் மகாவம்ச மனோபாவத்தில் இருந்து விலகி, நம்பகரமான பிற வரலாற்று மூலங்களையும் நுணுகி ஆராய்வது அவசியமாகும். இதன் மூலமே இந்நாட்டோடு ஒட்டிய தமிழரின் வரலாறு துலக்கம் பெறும். இதற்கு கல்வெட்டுக்கள்

கூறும் வரலாறு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இலங்கையில் எழுதப்பட்ட காலத்தால் முந்திய கல்வெட்டுக்கள் 'பிராமிக்' கல்வெட்டுக்கள் என அழைக்கப்படும். இக் கல்வெட்டுகள் கி. மு. 3 முதல் கி. பி. 3 வரையான 600 ஆண்டுகால வரலாற்றை அறிய உதவுகின்றன. இக்கல்வெட்டுக்களை பெருங்கற்காலப் பண்பாட்டின் வழி வந்த திராவிட மக்களே எழுதி வைத்தனர் என்பதை பெரும்பாலான கல்வெட்டுக்கள் பெருங்கற்கால மையங்களில் இருந்து கண்டு பிடித்ததன் மூலம் உறுதியாகிறது. இக்கல்வெட்டுக்களின் அமைப்பு தமிழ் நாட்டில் உள்ள கல்வெட்டுக்கள் என மயங்கும் அளவிற்கு ஒற்றுமை உடையதென்பது அறிஞர்கள் பலரது பொதுவான கருத்தாகும். இவற்றுள் பெரும்பாலான கல்வெட்டுக்கள் பிராகிருத மொழியிலும், சில தமிழ் மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. ஆனால் பெரும்பாலான பிராகிருதமொழிக் கல்வெட்டுக்களில் செறிவான தமிழ்ப் பெயர்களையும், சொற்களையும், தமிழ் மொழிக்கே சிறப்பாக உள்ள எழுத்துக்களையும் காண முடிகிறது. இவற்றை அவதானித்த தமிழ் நாட்டு அறிஞரான பேராசிரியர் ரி. வி. மகாலிங்கம் இலங்கையிற் கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழ்மொழியின் சிறப்பை ஆராய முற்படுவோருக்கு நல்ல சான்றாக அமையும் எனக் குறிப்பிட்டுள்ளார். ஓரிரு வரி வடிவங்களில் எழுதப்பட்டுள்ள இக்கல்வெட்டுகள் சிற்றரசர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள், கலைஞர்கள், பிராமணர்கள் எனப் பலதரப்பட்ட சமூகத்தினர் பௌத்த துறவிகளுக்கு அளித்த தானங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம், அரச நிர்வாகம் என்பன பற்றிக் கூறுகின்றன. அவ்வாறு கூறும்போது கல்வெட்டை எழுதுவித்தோர் தமது சமூக அந்தஸ்து, குடும்ப உறவுபட்ட பெயர், தொழில், சமயம் என்பனவற்றையும் எழுதுவித்தனர். இதனால் இக்கல்வெட்டுக்களை ஆராய்வதன் மூலம் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முற்பட்ட இலங்கையின் சமூக அசைவாக்கத்தை அறிந்து கொள்ள முடிகிறது. அதில் தமிழ்ச் சமூகத்தின் வரலாறு தனித்து ஆராயத் தக்கது.

ஆதிகாலத்தில் இந்நாட்டு மண்ணோடு ஒட்டிய தமிழர் வரலாறு அயல்நாட்டிலிருந்து ஆக்கிரமிப்பாளராக வந்து ஆட்சியைக் கைப்பற்றிய தமிழ் மன்னர்கள் என்ற கதையோடு பாளி இலக்கியங்களில் முடிவடைகிறது. இதற்கு மன்னர்களைப் பற்றிய வரலாறே இந்நாட்டு மக்களுக்குரிய வரலாறாக பாளி இலக்கியங்கள் கூறமுற்பட்டமை ஒரு காரணமாகும். ஆனால் இம்மன்னர்களின் ஆட்சிக்குப் பின்னால் இருந்த மக்களைப் பற்றி இந்நூல்கள் கூற முற்படவில்லை. சிங்கள மன்னர்களின் வரலாற்றைக் கூறும்பொழுது அம்மன்னர்கள் மக்களுக்கும், பௌத்த மதத்திற்கும் ஆற்றிய தொண்டுகளை விரிவாகக் கூறுகின்றன. இவை பிற்காலத்தில் சிங்கள மக்களின் வரலாறாக எழுதப்படக் காரணமாயின. ஆனால் தமிழ் மன்னர்களின் ஆட்சி பற்றிக் கூறும் பொழுது அவர்கள் மக்களோடு கொண்டிருந்த உறவு பற்றியோ, மக்களுக்கு ஆற்றிய பணி பற்றியோ எதுவுமே கூறவில்லை. இதனால் தமிழ் மக்களின் வரலாறு பாளி இலக்கியங்களில் ஒப்பீட்டளவில் தொய்ந்த நிலையிலேயே காணப்படுகிறது. ஆனால் தமிழ் மக்களுக்கு இந்நாட்டு மண்ணோடு ஒட்டிய பாரம்பரிய வரலாறு உண்டு என்பதைக் கல்வெட்டுக்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

## தமிழர் சமூகம்

ஆதிகால இலங்கையின் சமூக அமைப்பை அறிவதற்கு இரு வகையான சான்றுகள் கிடைத்துள்ளன. பௌத்த சிங்கள வரலாற்றை முதன்மைப்படுத்தும் நோக்கில்

எழுந்த பாளி, சிங்கள இலக்கியங்கள் இலங்கையின் பண்பாடு வடஇந்தியத் தொடர்பு கொண்டு வளர்ந்ததென்பதை நிறுவும் நோக்கில் வடஇந்திய இலக்கியங்கள் கூறும் நால்வகை வர்ணப் பிரிவுகள் இலங்கையில் இருந்ததாக வலிந்து கூற முற்படுகின்றன. ஆனால் பிராமிக் கல்வெட்டுகள் கி. மு. 3ஆம் நூற்றாண்டில் இருந்து பல இனக் குழுக்கள் தொழில் அடிப்படையில் பல்வேறு பிரிவினராகப் பிரிந்து வளர்ச்சியடைந்ததை உறுதிப்படுத்துகின்றன. மகாவம்சம் விஜயனின் முடிசூட்டுவிழாவின் போது பாண்டி நாட்டிலிருந்து கைத்தொழில் கலைஞர்களும், பதின்னான்கு (குடி) சாதிகளுக்குரிய ஆயிரம் குடும்பங்களும் இலங்கையில் வந்து குடியேறியதாகக் கூறுகிறது. இக்கூற்று உண்மையென ஏற்பது கடினமாயினும் இக்கூற்றில் இருந்து மகாவம்ச ஆசிரியர் வாழ்ந்த காலத்தில் இலங்கையின் சமூக அமைப்பு தொழில் அடிப்படையில் பிரிந்து வாழ்ந்ததை உறுதிப்படுத்துவதாக எடுத்துக் கொள்ள இடமுண்டு. இத்தொழிற்பிரிவுகளே பிற் காலத்தில் சாதிப் பிரிவுகளாக உருவெடுத்ததை வரலாற்றுரீதியாக அறிய முடிகிறது. தமிழ்நாட்டிற்கூட இத்தகைய ஒரு சமூகப் பிரிவு இருந்ததை பழந்தமிழ் இலக்கியங்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. இது இலங்கைத் தமிழ் நாட்டு சமூக அமைப்பு வடஇந்திய சமூக அமைப்பில் இருந்து முற்றிலுமாக வேறுபட்டு நிற்பதைக் காட்டுகிறது.

இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களை ஆராய்ந்தால் அவற்றில் பல்வேறு இனக் குழுக்களையும், தொழில் அடிப்படையில் வேறுபட்ட சமூகப் பிரிவினரையும் அடையாளம் காணமுடிகிறது. இவர்களில் ஒரு பிரிவினரைச் சிங்கள சமூகமாக இனங்காண பாளி, சிங்கள இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் என்பன உதவுவது போல, இன்னொரு பிரிவினரைத் தமிழ்ச் சமூகமாக இனங்காண பழந்தமிழ் இலக்கியங்களும், தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளும் உதவுகின்றன. இதன்மூலம் வரலாற்றுத் தொடக்க காலத்தில் இருந்து ஈழத்து தமிழ்ச்சமூகம் பற்றி தெரிந்து கொள்ள முடிகிறது.

இலங்கையில் இதுவரை கிடைத்த 21 பிராமிக் கல்வெட்டுகள் பரதவ குலம் பற்றிக் கூறுகின்றன. இவற்றுள் அனுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் வணிகர்கள் ஒன்று கூடி வர்த்தக ஆலோசனை நடத்திய கி. மு. 1 ஆம் நூற்றாண்டுக்குரிய கட்டிடத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று ஈழத்துப் பரதவர் பற்றிக் கூறுகிறது. ஏனைய பரதவகுலம் எருப்பொத்தானை, புளியங்குளம், வெடிக்கனாரிமலை, வவுனியா, புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் நாட்டின் தென்பகுதியிலும் வாழ்ந்ததை இக்கல்வெட்டுகள் கூறுகின்றன.

சங்ககாலத்தில் நெய்தல் நிலத்தில் வாழ்ந்த பரதவகுலம் மீன் பிடித்தல், முத்துக்குளித்தல், வர்த்தகம், கப்பல் ஓட்டுதல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டதாக பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. இவர்களின் வர்த்தக நடவடிக்கையில் குதிரை, வாசனைத்திரவியங்கள், உப்பு, இரத்தினக்கல் என்பன முக்கிய வர்த்தகப் பொருட்களாக விளங்கின. இலங்கையிற் கூட இவ்வாறான தொழில் நடவடிக்கையில் இப்பரதவகுலம் ஈடுபட்டதைக் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. மகாவம்சம் கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த சேனன், குத்திகன் என்ற தமிழ்மன்னர்களை குதிரைவர்த்தகத்தில் ஈடுபட்டவனின் பிள்ளைகள் எனக் கூறுகிறது. சுதர்சன் செனிவரட்ண என்ற சிங்கள அறிஞர் சங்க இலக்கியத்தில் பரதவகுலம் குதிரை வர்த்தகத்தில் ஈடுபட்டதற்கு ஆதாரங்கள் இருப்பதால் அனுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்த பரதவ குலத்தவராக

இருக்கலாம் என்றார். சங்க காலத்தில் இலங்கையின் முக்கிய துறைமுகமாகவும், முத்துக்குளிக்கும் பிரதேசமாகவும் இந்திய இலக்கியங்களில் வருணிக்கப்பட்ட மாதோட்டத்தில் இன்றும் பதபரதகுலம் கடற்றொழிலில் ஈடுபட்டு வருவதைக் காணலாம். இவர்கள் வரலாற்றுத் தொடக்க காலத்தில் இலங்கையில் வாழ்ந்த பரதவகுலத்தின் வழித்தோன்றல்கள் எனக் கூறலாம்.

கல்வெட்டுகளால் அறியப்படும் இன்னொரு தமிழ்ச்சமூகம் வேளிர் என்பதாகும். இலங்கையில் இதுவரை அநுராதபுரம், புத்தளம், மன்னார், வவுனியா, பொலநறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், பூநகரி ஆகிய இடங்களில் கிடைத்த 22 கல்வெட்டுகளில் இப்பெயர் அடையாளம் காணப்பட்டுள்ளது. இப்பெயர் கல்வெட்டுக்களில் வேளான், வேளா ,வேள் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இற்றைக்கு ஒரு நூற்றாண்டு முன் பெரிய புளியங்குளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் இப்பெயரை அவதானித்த பாக்கர் என்ற அறிஞர் இக்கல்வெட்டை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட தமிழுக்கேயுரிய வரிவடிவம் ஆதியில் தமிழர் இங்கு வாழ்ந்ததை உறுதிப்படுத்துவதாக குறிப்பிட்டார். இதையொத்த பெயர்கள் சங்ககாலத்தில் புழக்கத்தில் இருந்ததை மேட்டுப்பட்டி, கழுகுமலை ஆகிய இடங்களில் கிடைத்த கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. சங்க இலக்கியத்தில் இப்பெயர் வேள், வேளிர், தென்முடிவேளிர், முதுகுடி வேளீர், வேந்தரும் வேளீர் எனப் பலவாறு விபரிக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் இப்பெயர் குலத்தை, இடத்தை சிற்றரசை குறிக்கப்பயன்படுத்தப்பட்டன என்பதை சங்க இலக்கியத்தில் வரும் வேள் குடி, வேள்குலம், வேள்கிராமம், வேள் பட்டி, வேளாபுரம் போன்ற பெயர்கள் உறுதிப்படுத்துகின்றன.

அண்மையில் பூநகரியில் தமிழ்மொழியின் பயன்பாடு ஆதியில் இருந்ததை உறுதிப்படுத்தும் பிராமிக் கல்வெட்டுகள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுகளில் ஒன்று வேள் என்ற சமூகம் பற்றிக் கூறுகிறது. நாம் வேளா என வாசித்ததை தமிழ்நாட்டு சாசனவியலாளரான ஐயாவதம் மகாதேவன் வேளான் என்று வாசித்துள்ளார். இவர் இச்சாசனத்தின் முக்கியத்துவம் பற்றி கூறிய கருத்தை இங்கு நோக்கலாம்.

'தமிழ்மொழியிலும், தமிழ்ப்பிராமி எழுத்துக்களிலும் ஆன இச்சாசனம் கி. மு. 3 அல்லது 2 நூற்றாண்டுகளைச் சேர்ந்ததென்று எழுத்தமைதியில் இருந்து கூறமுடியும். வேளான் என்ற பெயர் சங்ககாலவேள், வேளீர் ஆகிய குறுநில மன்னர்களையும், பிற்கால சோழர் காலத்தைய (மூவேந்தர்) வேளான் என்ற பெயரையும் ஒத்திருப்பதால் இலங்கை யாழ்ப்பாணப் பகுதியில் (பூநகரி) சங்ககாலத்திலேயே தமிழ்வேளீர் அல்லது வேளார் குடியிருந்தனர் எனக் கூறலாம்.'

இவரது கூற்றிலிருந்தும், வேளீர் தொடர்பாக இலங்கையிற் கிடைத்த கல்வெட்டுகளில் இருந்தும் சங்ககாலத்தை ஒத்த சமூகம் சமகாலத்தில் இலங்கையிலும் வாழ்ந்தது என்பதை நிச்சயப்படுத்திக் கூறலாம். இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் வேளீர் என்ற சமூகம் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய பிராந்தியங்களோடு இணைந்து வாழ்ந்ததை சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இப்பெருங்கற்காலப் பண்பாட்டோடுதான் இரு பிராந்தியங்களிலும் நிலையான விவசாய அமைப்பு முறை தோன்றியது. இதற்கு பெருங்கற்கால மக்களின் குடியிருப்புக்களோடு வயற்பரப்பும், குளமும் இணைந்திருந்தமை சிறந்த எடுத்துக்காட்டாகும். செம்பகலட்சுமி என்ற தொல்லியலாளர் பெருங்கற்காலப் பண்பாட்டின் வழிவந்த வேள்குடியின் பிரதான தொழிலாக விவசாயம்

விளங்கியதென்றார். இப்பின்னணியிலே தான் பிற்காலத்தில் வேளாளர் என்ற சமூகம் விவசாயத்துடன் தொடர்புடைய வர்களாக மாறுவதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது. இலங்கையில் வேளார் என்ற சமூகம் ஆதிகாலத்தில் மட்டுமன்றி 10 ஆம் 11 ஆம் நூற்றாண்டில் உயர் பதவி வகித்த நிர்வாகிகளாக கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதனால் தற் கால தமிழ் சமூகத்தில் வாழும் வேளாளர் சமூகத்தின் பூர்வீகத்தை கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் இருந்து ஆராய இடமுண்டு.

கல்வெட்டில் இடம்பெறும் மற்றொரு முக்கிய பெயராக 'ஆய்' விளங்குகிறது. இப்பெயர் சில இடங்களில் இனக்குழுவா கவும், சில இடங்களில் பதவிப் பெயரா கவும் கல்வெட்டுக்களில் தோற்றமளிக்கி றது. இதன் மூலத்தை ஆராய்ந்த பேரா சிரியர் பரணவிதான இது வடமொழியில் உள்ள 'அரய' என்ற சொல்லின் திரிபு எனவும், பிற்பட்ட சிங்களக் கல்வெட்டில் வரும் 'ஆப' என்பது இதன்வழித் தோன் றல் எனவும் கூறினார். பேராசிரியர் மகாலிங்கம் இக்கருத்தை மறுத்து சங்க இலக்கியத்தில் வரும் 'ஆய்' என்ற நிலக் குழுத் தலைவர்களை, இனக்குழுவை இப் பெயர் குறித்ததென்றார். சங்க இலக்கியத் தில் இந்த 'ஆய்' என்ற பெயர் முல்லை நில மக்களைக் குறிக்கப்பயன்படுத்தப்பட் டுள்ளது. இப்பெயர் ஒரு இனக் குழுவாக மட்டுமன்றி சிற்றரசனை, தனிமனிதனைக் குறிக்கும் பெயராகவும் பயன்படுத்தப்பட் டுள்ளது. இதற்குச் சிறுபாணாற்றுப்படை யில் வரும் வேள்—ஆய், புறநானூற்றில் வரும் மாவேள்—ஆய், தேர்வேள்—ஆய், அகநானூற்றில் வரும் நன்னன் — ஆய் போன்ற பெயர்கள் சான்றாகும். இவ் வொற்றுமைத் தன்மை இலங்கைப் பிரா மிக் கல்வெட்டிலும் காணப்படுகிறது. இலங்கைப் பிராமிக் கல்வெட்டில் வரும் ஆய் என்ற பெயரின் பெண்பால் வடிவமாக 'அபி' என்ற பெயர் விளங்குகிறது. இது ஒரு தூய தமிழ் பெயர் என்பது அறிஞ ரின் கருத்தாகும். தமிழ் பேரகராதியில் 'அபி' என்ற பெயருக்கு மேன்மை, பெருமை, விருப்பத்திற்குரியவள் என விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இதன் ஆண்பால் வடிவமான ஆய் தமிழ்ச் சமூகத்தில் இருந்த ஆயார் குலத் தைக் குறித்ததெனக் கூறலாம்.

(தொடரும்)

---

## சிங்க(ள)த் துறவிகள்



அவர்களுக்கு,
எந்த நாளும்
எம்மைப்பற்றித்தான்
கவலை!

யோசிக்க...
யோசிக்க...
நோய்தான் கூடுகிறது!

பக்கவாதம்...
பாரிசவாதம்...
முட்டுவாதம்...
முழங்கால் வாதம்...
எல்லாமே ஒன்றுசேர
ஏற்படுகிறது
இனவாதம்!

அலெக்ஸ் பரந்தாமன்

சோ. பத்மநாதன்

# கூப்பாடு போடுவதால் மட்டும் கை கூடுவதோ?

''எங்கையடி பிள்ளை இவன்செழியன் போயிட்டான்?''
''பொன்னம்பலம் கடைக்கு - பொச்சுமட்டை வாங்க எணை!''
''பொச்சுமட்டை கூட கடைவழிய விக்கினமே?
ஏத்திவர வண்டில், இவன் பிடிச்சுப் போடுவனே?''
''ஆச்சி, உனக்கிதெல்லாம் சொல்லி விளங்காது;
போட்டுக் குடையிறாய்!
பொச்சுமட்டை நாலோடை வாறான் செழியன்!...
மரவள்ளி அவியுதெணை!''
(தாய்உள்ளே போக, 'பொடி'யைத் தனியவைத்து)
''நீ எவ்வளவுக்கு வாங்கினனி?''
''நாலுமட்டை பத்துரூபா ஆச்சி!''
''பாழ்படுவார்!
வாயிலைமண் இப்பிடியே போடுறது!''
''ஏன் ஆச்சி திட்டுறநீ?''
''பின்னையென்ன, என்ரை பெரிய வளவில் எண்டா
தென்னைமட்டும் நாப்பதடா!
பாளை, உரிமட்டை எங்கும் கிடக்குமெடா!
ஏழை எளியதுகள் வந்து பொறுக்கும்;
நான் வாயே திறப்பதில்லை!
சித்திரைக் கஞ்சிக்கும்
திருவெம்பாப் பூசைக்கும்
எத்தினை குலையள் இறக்கிக் குடுப்பன்!
இப்ப பொச்சுமட்டை வாங்க
புதுநாணயமாய்த்தான் பிச்சை எடுக்கிறியள்!
(பெத்தாச்சி சொல்லுகிற
பன்னாலைக் காணி பரப்பு பதினாறும்
பொன்னாய் விளைகின்ற பொக்கணை நெல்வயலும்
ஏழுதலை முறைக்குப் போதுமென்பது உண்மைதான்!)

II

ஆலடியில் கூட்டுறவுக் கடையின் முன் கூட்டம்
ஆடவர்கள், அரிவையர்கள், சிறுவர், முதியோர்கள்;
காலையிலே, கைப்பைகள், முத்திரைகள், 'காட்டு',
கைத்தடிகள், குடை, செருப்பு, புடைசூழ நின்றார்.

''இந்தமுறை நிவாரணத்துக்கு என்ன குடுக்கினமாம்?''
''இரண்டு கிலோ சீனியெணை; அஞ்சு கிலோ மாவாம்!''
(கந்தையரும் கண்மணியும் உரையாட லானார்)
''கார்த்திகை மாதத்தரிசி புழுக்கூடு – கல்லு!''

பூநகரி நெல்லரிசி சாப்பிட்ட சுவையும்
பொன்னாலை வயலிலே புதிரெடுத்துப் பொங்கும்
'நாநயமும்' அசைபோட்டபடி இவர்கள் நின்றார்
நடுவெயிலில் நிவாரணத்தை எதிர்பார்த்த தவத்தில்!

III

''சூசை துலைக்கே?''
''தொட்டிலடி வரைக்கும்!
மேரி - இளையவள் - பிள்ளைபெத்து அஞ்சுநாள்!
ஏதும் நகரை, திரளி அகப்படுதோ
பாப்பமெண்டு போறன்!''
—பதிலளிக்கிறான் சூசை.

ஆழக் கடலை அளந்த தொழிலாளி
தாழையடி, நாகர்கோயில், மணற்காடு,
வெற்றிலைக் கேணிவரை தோணி செலுத்தித்தன்
வெற்றிக் கொடிநட்ட வீரன் - இவன் சூசை!
நாறல் கருவாட்டைத் தேடி நடக்கின்றான்!

IV

ஏனிவ் வலைச்சல்? எதனால் அவலங்கள்?
ஏன் நம் நிலமும் கடலும் எமதில்லை?
வீடெல்லாம் ஏனிவ் வெறுமை? - அடர்ந்த
காடெல்லாம் ஏன் ஆரவாரம்?
செழியன்ரை ஆச்சி
விறகுக்கு ஆரைப்போய் நோகிறது?
பொன்னாய் விளைகின்ற பூமி எங்கு போனதுவோ?
சூசை செலுத்திய தோணி தொலைந்ததுமேன்?
வீசி விரித்த வலைநாசம் ஆனதுமேன்?

மணம்புரிந்த நாலாம் மாதமே,
காங்கேசு பறந்து விட்டான்!
செழியன் தகப்பன் முகமறியான்!
பன்னாலைக் காணி பராமரிக்க ஆளில்லை!
பொன்னாலை பூநகரி எங்கும் புகுந்தவெள்ளம்
வயலை அழிக்காமல் வரம்புகட்ட ஆளில்லை!
அயல் நாட்டு வாழ்க்கை அதுவே சுகமென்று
போனார் இளைஞர்! - புலம்பியென்ன ஆகிறது?

சுற்றிவர நெருப்பு; துலாவிழுந்து கிடக்கிறது!
பட்டை, கயிறு இல்லை;
பாறிக் கிடக்கிறது ஆடுகால்!
சும்மா வயிற்றில் அடித்தென்ன?
''ஓடிவா!'' என்றால் ஒருத்தன் வருவானே?
தந்தை தளர்கின்ற போது, அவனைத் தாங்குதற்கு
மைந்தன் இங்கில்லாது 'மாறி' விட்டால்?...
தோணியினைக் காப்பாற்றுவது ஆராம்?
ஆழக் கடலோரம்
கூப்பாடு போட்டால்
விடியல் கை கூடுவதோ?

---

## கிழக்கு அவலம்



தாகங்களோடு
அழுக்கு முகங்கள்
கதவுகளைத் தட்டும்!
சாமப் பொழுதில்
விழிகள் பிதுங்கும்!
அக்காளின் அலறல்
இதயத்தைப் பிழிய,
அம்மாவின் ஒப்பாரி
அயல்வீட்டை அதிர்க்க,
துப்பாக்கி சடசடக்கும்...!
சப்பாத்துக் கால்கள்
மெல்ல, மெல்ல
பக்கத்து வீட்டுப் படலையை
உதைக்கும்!
விடியும்...
வீட்டில் ஊரே கூடும்.
அக்காள்,
தூக்குக் கயிற்றில் தொங்குவாள்.

கருணை ரவி

## மதிப்பீட்டுரை

- **செவ்வரத்தம்பூ** (சிறுகதைத் தொகுதி)
- **ந. கிருஷ்ணசிங்கம்**
- விலை: ரூபா 100
- பக்கம் – 102

இது ந. கிருஷ்ணசிங்கத்தின் முதல்தொகுதி. பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பிரசுரமாகியிருந்த சிறுகதைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

நமது சூழலில் நளாந்தம் நடக்கின்ற இழப்புகள், அழிவுகள், தியாகங்கள், போராட்ட முனைப்புடன் இயங்கும் பல் நிலைப்பட்ட செயற்பாடுகள், உணர்வுகள், போராட்டத்துக்கு முகம்கொடுக்கத் திராணியற்ற பொறுப்பின்மைகள், நேர்மையீனங்கள், சிங்களப் பேரினவாத அரசின் அடக்குமுறை நடவடிக்கைகள் என்ற பரப்புகளில் இந்தக் கதைகள் அமைகின்றன. மிகவும் சுட்டிப்பாக போராட்டத்தின் நியாயத்தை, அதன் தவிர்க்கவியலாத நியதியை எல்லாக்கதைகளிலும் உணரும்படி கோடிடுவதில் கிருஷ்ணசிங்கத்தின் அக்கறைகள் நிரம்பியுள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்கரையோரச் சூழலையும் அப்பகுதி மாந்தரையும் அநேக கதைகள் நமக்கு அறிமுகமாக்க முனைகின்றன. ஆனால், இந்த அறிமுகப் படுத்தலில் அல்லது வெளிப்பாட்டு முறைமையில் கிருஷ்ணசிங்கம் பல இடங்களில் சிக்கலடையும் தன்மையைக் காணக்கூடியதாகவுள்ளது நிகழ்வைச் சித்திரிப்பனவாகவும், பாத்திரங்களின் குணவியல்புகள், நடத்தைகளை அவற்றுக்குரிய தனித்துவங்களுடன் வெளிப்படுத்துவனவாகவும் இவற்றினூடு சூழலையும், காலத்தையும் உணர்த்துவனவாகவும் இருப்பது நல்ல சிறுகதைகளின் பொதுவான அடையாளம். இங்கே கிருஷ்ணசிங்கம் சூழலையும், சம்பவங்களையும் செய்தியாகவே அதிக இடங்களில் தருகின்றார். சித்திரிப்புத்திறன் சிதைவடையும் நிலையில் பிரச்சாரத்தொனி மேலோங்குகிறது.

'ஸ்ரீலங்கா புத்தகுடியரசின் அதர்மிஸ்ட அரசாங்கத்தின் அதியுத்தமர் விடுத்த செய்தியை லங்காபுவத் முத்திரை பதித்து வானொலி முழங்கிக்கொண்டிருந்தது.'

(சிதையில் ஒரு சத்தியம் பக். 25)

'புத்தமத தர்மமும்– பஞ்சசீலமும் அதியுத்தம தர்மிஸ்டமும் இணைந்து கைகோர்த்து, வடமராட்சி வீரமண்ணை சிவப்பாக்கியபடி 'ஒபறேசன் லிபறேசன்' நடைபெறுகிறது.

(சிதையில் ஒரு சத்தியம். பக். 27)

இவற்றில் ஒரு கேலியுடனான விமர்சிப்பு இருந்தாலும் இவை செய்தியாகவே வாசகன் மனதில் உணரப்படும். இந்த நிகழ்வுகளைச் சித்தரிப்பாக்கும்போது அந் நிகழ்ச்சிகளை நேர்மையாக காணுவதான அனுபவத்தையும், இவற்றுக்குரிய காரணகாரர்களையும் வாசகனால் இனங்காண முடியும். இவற்றில் கவனங்கொள்ளாத தன்மைகள் எல்லாக்கதைகளிலும் ஒரு நெருடலை ஏற்படுத்துகின்றன.

தன் அனுபவங்களைப் படைப்பாக்குவதிலும் பார்க்க சூழலில் நடைபெறுபவற்றை, தான் அறிந்தவற்றை பதிவாக்கும் அந்தரப்பாடுதான் இதற்குக் காரணமோ எனவும் எண்ணவைக்கின்றது.

ஆனால், நமது இன்றைய வாழ்வையும் எங்கள் போராட்டத்தையும் வெளியே பிரதிபலிக்க முயற்சிக்கின்றார் கிருஷ்ணசிங்கம். இந்தக் கதைகளினடியாகத் தெரிவது கிருஷ்ணசிங்கத்தின் நேர்மையான எண்ணங்களே!

— கருணாகரன்.



# நிலை பெறுதல்

**சத்துருக்கன்**

அவன் அங்கு வந்து சிறிது காலந்தான் இருக்கும். அவனைக் கண்ட நாட்களில் இருந்து அவன் இருந்த தோற்றத்தில் மாறுதல்கள் ஏதும் புதிதாகத் தென்படவில்லை. தனது சகாக்களுடன் நடமாடும் போதெல்லாம் அவனை அவ்வளவு மனிதருள்ளும் தனித்தே படம் பிடித்துக்கண்டு கொள்ளும் எனது மனம். எனது பார்வைகள் ஒவ்வொன்றும் அவனில் படும் போதெல்லாம் உணர்ந்தோ உணராமலோ, தெரிந்தோ தெரியாமலோ அவனது முகம் எதிர்த்திசையையே பார்க்கும். வீதிவழியால் எட்டவாகச் செல்லும் ஒவ்வொரு பொழுதிலும் அவன் என்னை அவதானிப்பதாய் என்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

வாரத்தில் ஒருமுறை அவனதும் எனதும் காணுகைகள் நிகழ்ந்தபடி இருந்தன. சந்திப்புகள் ஒவ்வொன்றிலும் அவன் மீதான அவதானிப்புக்கள் என்னில் மிகவும் அதிகமாகவே இருந்தன. அவனைக் காணும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் அதன் பின்னரும் அவனிடம் எதையாவது பேசி அவனைப் பற்றி அறிய வேண்டும் போல் என்னுள் தோன்றும்.

அவனைப்பற்றிய தகவல்களை யாரிடமாவது அறிந்து கொள்வதற்கு எவரிடமும் உரியமுறையில் தகவல்கள் இல்லாமல் போயின. அவனைப்பற்றிய புதிர் முடிச்சுக்கள் என்னுள் புதைந்து கிடந்து என்னை உழைய வைத்துக் கொண்டே இருந்தன. வாரங்களின் கழிவுகள் அதிகரித்ததே அன்றி அவனிடம் பழகவோ, கதைக்கவோ, ஏற்ற உறவோ, அறிமுகமோ ஏற்படவில்லை.

• • •

ஊர் வரண்டு போய்க் கிடந்தது. தென்னைகள் எல்லாம் முடியும் தலையும் இழந்து தவித்து நின்றன. வீடுகளின் சுவர்கள் குண்டுகளின் அதிர்வால் உருவழிந்

திருந்தன. சாய்ந்து கிடந்த வேலிகளில் கறையானின் படர்தல்... மரங்கள் விறகாய்க் கருகிக்காய்ந்து இருந்தன. புற்கள் கருகி நீளத்துக்கு... வயல்வரம்புகளின் எல்லைகள் தெரிய முடியாதபடி எல்லையற்று பற்றைக்காடு. பாதுகாப்புக்கு அமைக்கப்பட்ட காவலரண்களில் அடுக்கிய மண் மூட்டைகள் சிதைந்து அழிந்து உலூர்ந்து கிடந்தன. எஞ்சியிருந்த மரங்களின் குருத்துக்களையும் வாழை மரங்களையும் இரையின்றிய மாடுகள் காந்திக் கொண்டிருந்தன.

சற்றுத்தூரத்தில் கேட்டுக்கொண்டிருக்கும் இராணுவத்தினரின் கூச்சல்களும் குழறல்களும், 'ட்ரக்' வண்டிகளின் உறுமிய இரைச்சல்களும் கிலிகொள்ளவைக்கும்.

ஊரின் எல்லையிலிருந்த கோயிலில் எப்போதாவது தனக்கு இயைந்தாற் போல் இரகசியமான முறையில் ஐயர் மந்திர உட்சாடனம் செய்து பூசை நடத்துவார். வழிபடுவதற்கு நாய்களின் கூட்டங்களும். காகங்களும் மட்டுமே கூடிக்குலாவி காணப்படும். தாங்களும் அகதியாக்கப்பட்ட பின்னர் கடவுளும் புலம் பெயர்ந்துவிட்டதாக அவ்வூர் மக்களின் நினைப்பு. ஆனால் ஐயர் மட்டும் இப்போதும் கடவுளை அங்கேயே தேடுவதாக பேச்சு.

வாரம் ஒரு முறையாயினும் ஊரின் முகம் பார்த்துவிட்டு வர அவாவும் மனசு. என்றைக்கும் அந்த ஐயரைக் காண முடிந்ததில்லை. கோயிலின் வாசல் எப்போதும் திறந்தபடியே இருக்கும். கதவுகள் கண்காணாதபடி எங்கோ மறைந்து போயிற்று. சாய்ந்த கோபுரத்தில் ஒற்றையாய் தலை இழந்து கிடந்த சிலையின் கைகளில் ஒன்று, பரதசாஸ்திரத்தில் புதிதாக ஒன்றைக் கற்பித்துக் கொண்டிருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக நின்ற ஆலமரங்களில் பறவைகளின் குடிகொள்ளல் கூடுதல் இப்போது. பறவைகளின் எச்சங்களால் மூலாம் பூசிக் கிடந்த மணி, நாதம் இழந்து கிடந்தது.

கோயிலுக்கும் ஊருக்கும் ஒன்றாகிப்போன கிணற்றடியில் மட்டும் ஒற்றைத் தென்னையும், நொச்சிமரமும் பச்சைப்பட்டையுடன் நின்றன. கிணற்றில் துலா சாய்ந்து கிடந்த காலத்தில் அது துரதிஸ்டமாக இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது. பிறகு, ஒற்றைக் கயிற்றுடன் வாளியொன்று மட்டும். 'உழண்டியில்' தொங்கிக் கொண்டிருந்தது அதிசயம் தான்.

பரிச்சயமாகிப் போன ஊரை ஒரு தரம், ஆபத்தோடாயினும் சுற்றிப் பார்த்து விட்டு, அந்தக் கிணற்றில் நீர் அள்ளிக் குடிக்க வேணும். இல்லையென்றால் அன்று மனம் உறங்காது. சென்ற காலங்களை நினைவுபடுத்திக்குமுறும்.

● ● ●

எதிர் பாராமல், அன்று ஐயரின் மந்திர உட்சாடனம் சற்று அதிகரித்த தொனியிலேயே கேட்டது. அந்த ஒற்றையடிப் பாதை பெருவீதியில் சென்று மிதக்கும். அதன் பாதை கரடுமுரடாக இருந்த போதும், அதன் பயணம் அவனுக்கு இதமாகவோ அன்றி இயல்பாகவோ அமைந்து விட்டதொன்று. அவனில் எப்பொழுதும், அவனோடு ஒன்றித்தபடி தொங்கிக்கொண்டிருக்கும் துப்பாக்கி அவனது தோளை கெட்டியாக அழுத்திப் பிடித்திருந்தது. உடலோடு ஒட்டியபடி கட்டப்பட்டிருக்கும் 'கோல்சர்பை.... இவை எல்லாவற்றையும் சுமப்பதற்கு துணிவும் திடமும் அவனுக்கு இப்போது பிறந்திருக்கிறது.

வலுவான அவனது மிதிப்பு அவனது நிதானத்தையும், திடகாத்திரத்தையும் பேரம்பேசியது. மெல்ல வழுகமுனையும் 'டாஸ்-2' வை சீர்படுத்திக் கொண்

டான். எப்பொழுதும் அவனது வலது கை 'ஜீன்ஸ் பொக்கற்'றினுள் நுழைந்தபடியே இருக்கும். ஒற்றைக் கையால் 'கான்ரிலை' பிடித்தபடி லாவகமாக சயிக்கிளில் வந்து கொண்டிருந்தான். புற்கள் மூடமுனையும் பாதையில் சயிக்கிள் விரைந்து வந்தது.

எதிர் பார்ப்புக்களுடன் அவனின் வரவை காத்திருந்த வேளை, அவன் வரவு அன்று மகிழ்ச்சியை ஊட்டிற்று. ஐயரின் மந்திரம், தேவார திருவாசகங்களுடன் தொடர்ந்து கொண்டிருந்தது. அன்றைக்காவது அவனருகில் சென்று எதையாவது அவனிடம் பேச வேண்டும் போல்... அவனை நோக்கி எட்டி நடந்தேன்.

அவன் மெல்ல, சாதுரியமாக சயிக்கிளால் இறங்கிக் கொண்டான். சயிக்கிளை கிணற்றின் அருகில் நிறை மரத்தின் கீழ் சாத்திவிட்டு, வலுவாக அழுத்திய 'டாஸ்-2'வை கழற்றி கிணற்றோடு சேர்ந்த படிக்கட்டில் நிறுத்தி வைத்தான். 'கோல்சர் பை'யை அதனோடு அணைத்துவைத்து, கொண்டு வந்த சாறத்தை மாற்றி விட்டு உடைகளை துவைப்பதற்காக ஆயத்தம் செய்தான். அவனது செயற்பாடுகள் ஒவ்வொன்றும் வெகு அலாதியான கதியில் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

எனது நடையில் தாமதம், கால்கள் திசைமாறி நடக்கமுனைந்து, தயங்கி என்னை நிறுத்திக் கொண்டன. அவன் என்னைக் கண்டு கொள்ள, எனது நடையை ஆறுதல் படுத்திக் கொண்டேன்.

"அவனிடம் எப்படிக் கதைப்பது? நானா அவனா ஆரம்பிப்பது? இல்லை .. பேசாமல் நின்று விடலாமா? திரும்பிப் போய் விடலாமா? என்னை அடையாளம் காண்பானா? ஞாபகம் இருக்குமா?" எனக்குள்ளேயே குமுறிய படி நடையை நிறுத்திக் கொள்ள, அவன் தண்ணீரை அள்ளித் தலையில் சொரிந்து கொண்டிருந்தான்.

தயக்கத்தோடு, அவனிடமல்லாது, கோயிலுக்குச் செல்பவன் போல் மெல்ல நகர்ந்து அவனருகால் சாதாரணபார்வையை அவன் கண்ணில் படும் வரை போட்டு எடுத்துக் கொண்டு அவனைக் கடந்தபோது சிறிய புன்னகையை துளிர்த்தான்.

கோயில் மண்டபத்தின் முனையில் நின்று அவனையே ஏதோ ஆதங்கத்துடன் பார்த்துக் கொண்டிருப்பதை அவதானித்து, அவன் மீண்டும் புன்னகைத்துக் கொண்டான். என்னிடமும் ஒரு சிலிர்ப்பு.

ஈச்சங்காய் போன்ற அவனது பற்களில் ஒன்று உடைந்து போயிருந்தது. பயிற்சியின் போது அல்லது சண்டையொன்றில் அவனுக்கு அது சம்பவத்திருக்கும். அவனது வலுவான தோற்றம் பிரமிப்பு ஊட்டிற்று. உடலின் அங்கங்கள் ஒவ்வொன்றும் பருத்து விரிந்திறுகியிருந்தன. வலுவானதோளும் உடலில் மெல்லிய பரவுதலாய் உரோமங்களும், முகத்தில் முளைவிடும் மீசையும் அவனை வயதில் குறைந்தவன் என சிலரால் மதிப்பிட முடியாமல் போகும். முதுகின் பிற்பகுதியில் ஆறியகாயத்தின் பெரியவடு பதிந்திருந்தது. ஏதாவது சமரில் அதுவும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

• • •

அவன் பள்ளியில் படிக்கும்போது வகுப்பில் பொல்லாத குழப்படிக்காரன், குறும்புக்காரன் என்று எல்லாரிடமும் பெயர்பெற்றவன். தண்டனைகளுக்கும் அவன் ஆளாகிய சந்தர்ப்பங்களும் உண்டு. பாடசாலையின் விளையாட்டு நிகழ்வொன்றில் அணி நடை பயிற்றுவிப்பதற்காக அவனை ஒருமுறை அழைத்துவந்து முன்வரிசையில் நிறுத்தியபோது அவன் யாருக்கும் தெரியாதபடி தப்பித்து வீடுபோய் சேர்ந்துவிட்டான். மறுநாள் அவனை நான் தண்டிக்க நேர்ந்தது. அப்போது

அவனைவிட நான்கு வகுப்புக்கள் உயரப்படித்துக் கொண்டிருந்தேன் நான்.

அவனை அழைத்து வந்து கையை நீட்டச் சொல்லி தடியால் அடிக்க முனைந்தபோது அவன் என்னை ஏமாற்றிக்கையை எடுத்துக் கொண்டான். கோபத்தின் மிகுதியால் வலதுகையை பிடித்து வைத்துக்கொண்டு, கையின் மொளிப்பகுதியில் அடித்த போது சகமாணவர்கள் முன்னிலையில் கதறிக் கொண்டான்.

அணிக்குழுவில் இருந்து அவனை நிறுத்திவிட்ட போது, மறுநாள் அணிநடை பயிற்றுவிக்கும் நேரத்தில் வந்துநின்று அதனை பார்த்துக்கொண்டு தனித்துநின்ற போது அவனில் பரிதாபம் வந்தது அன்று எனக்கு.

● ● ●

''என்ன யோசிக்கிறியள் கையோ...... அது.... மையின்சிலை ..'' சிரித்துக் கொண்டே அவன் சயிக்கிளை உன்னிமிதித்தான். தூரத்திலே ஹெலிகொப்ரர் ஒன்று வந்து கொண்டிருந்தது. காலையில் சமாதானம் 'முறிவடைந்ததாக ஊரில்பேசிக் கொண்டார்கள் அதுதான் இந்த உயரத்தில் பறந்து வருகிறதாக்கும்.

அந்தப் பாதை நன்றாகவே பழக்கப்பட்டது. அப்போதும் அவனது வலதுகை 'ஜீன்ஸ் பொக்கற்'' றினுள் நுழைந்தபடி... 'லாவகமாக துப்பாக்கியுடன் சயிக்கிளில் ஏறிமிதித்துப் புன்னகைத்தான்.

என்னால் சையசைக்க முடியவில்லை. □□

COMPUTER - BASIC
- LOTUS 1 - 2 - 3

CIMA
IAB

SHORT HAND & TYPING

வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

SCHOOL OF BUISINESS

ADMINISTRATION
16, 3 RD CROSS STREET
JAFFNA




அடம்பனூர்
செ. திருமாறன்

# இலக்கு

நள்ளிரா ..
மெல்ல இரைந்து சில்லென்று வீசும்
ஈரக்காற்று
வெண்பனியெங்கும் விளையாடும் சாமம்.
என் தோழனின் துயிலிடத்தில்
துயில்மறந்து விழித்திருந்தேன்
கோயில் மணியோசை குரலெடுத்தது ... நான்
குனிந்திருந்து நினைத்திருந்தேன்
நினைத்து நெகிழ்ந்ததும் நிமிர்ந்துகொண்டேன்.
அம்மா.........
கல்லறையில் வெள்ளொளியேற்றினாள்
கண்கள் பனிக்க காலடியில் விழுந்து கதறினாள்
"அப்பு எப்ப வருவாயடா" ஏங்கியழுதாள்.
அக்கா ......
சின்ன நினைவையெல்லாம்
எண்ணியெண்ணி விம்மி நின்றாள்.
தங்கை.........
கருவியோடு, அவனின்
கனவுசுமந்து, கண்ணீர் மல்க நின்றாள்...
"அண்ணா அமைதியோடிரு; நான் ஆயுதமேந்திவிட்டேன்"
உறுதியெடுத்திருப்பாள்.
நான் ......
கடந்த காலங்களை எண்ணி...... அதை
கண்ணீராக்கி அவனின் காலடியில் சேர்த்தேன்.....
கல்லறையை தொட்டேன்
கைகூப்பி வணங்கினேன்.
மெல்ல எழுந்து இலக்கில் நடந்தேன்.

# 3

**சு. சங்கிலிகுமாரன்**




மாரியில் தோட்ட வேலைகள் குறைவு. தோட்டங்களில் ஆடு, மாடுகள் கட்டப்பட்டிருக்கும் தோட்டப் பயிர்களை அவிழ்த்து விட்டு வரும் ஆடு மாடுகளும், காட்டுப்பக்கமிருந்து வரும் பன்றிகளும் தின்றழித்துவிடும். ஆட்கள் இல்லாவிட்டால் கள்ளரும் தங்கள் கைவரிசையைக் காட்டி விடுவார்கள். அதனால் இரவுக் காவல் எல்லாத் தோட்டங்களிலும் இருக்கும். நாலைந்து தோட்டக்காரர் ஒன்று சேர்ந்து காவல் இருப்பர்.

பெருமாரியில் மழை பிடிச்சால் ஓயாது. சில ஆண்டுகளில் ஒரு * மண்டலம் வரைக்கும் மழை பெய்யும். சிணுங்கிச் சிணுங்கியும் இடைக்கிடை சோவென வானந்தெறிக்குமாறும், சனியன் பிடிச்ச மாதிரி தொடர்ந்து பெய்யும். அந்த நாட்களில் கும்மிருட்டாக இருக்கும். பகலில் சூரியனைக் காணேலாது. புகை மூட்டமாக இருள் படர்ந்திருக்கும்.

காணுமிடமெல்லாம் வெள்ளம். வேலைகளே இருக்காது. இலுப்பங் கொட்டை சிந்தியும், கொக்கான் வெட்டியும், பன்ன வேலை செய்தும், இராமாயணம், மகாபாரதம், பெரிய எழுத்துச் சித்திர புத்திரனார் கதை முதலியவற்றை ஒருவர் சொல்ல மற்றவர்கள் பாராயணம் பண்ணியும் பொழுது கழியும்.

மாரியில் நெருப்பு மூட்டுவதே கடினம். தீப்பெட்டி புழக்கத்துக்கு வராத காலம். கருங்கல்லை உரோஞ்சியும் தீத்தட்டுக் கட்டைகளைப் பயன்படுத்தியும்தான் நெருப்பு மூட்டப்படும். தீத்தட்டுக் கட்டையில் மாரியில் சரியாக நெருப்பு மூளாது.

கதிராமு அப்பாதான் எங்களூரில் தீத்தட்டுக் கட்டைகளை நேர்த்தியாகச் செய்வார். சீமா வடலி வளவைச் சுற்றி நிறையக் கிளுவை மரங்கள் நின்றன. பாற்கிளுவையும், முட்கிளுவையுமாய் * துடையளவு மொத்தத்தில் அவை இருந்தன. கோடையில் அவற்றைத் தறித்துக் காயவிட்டு, அளவுக்கு * பொல்லங்களாய் நறுக்கி வைத்திருப்பார்.

பிறகு ஒவ்வொரு பொல்லாய் எடுத்து, சீவுளி கொண்டு சீவி மட்டப்படுத்துவார். கை வைத்தால் வழுக்குமாறு அழுத்தமாய்ச் சீவுவதில் அவர் விண்ணன். அந்தக் கட்டையின் நடுவில் வட்டமாய் ஒரு துளை இடுவார். அதற்குள் வட்டமாய்ச் சீவிய தடியொன்றைக் குத்துப் பாட்டாய்ச் செலுத்துவார். இழை பிசகாமல் இருக்க வேண்டும். இறுக்கமாகவும் இருக்காமல் இடைவெளியுள்ளதாய் இருக்காமலும் அமைப்பது கதிராமு அப்பாவின் தனித்துவம். அதிலும் அந்தத்தில் திரளவிட்டு, அழகாக்கியிருப்பார்.

---

* மண்டலம் - 40 நாட்கள்  * துடை - காற்தொடை  * பொல்லம் - துண்டு

செய்து முடித்த பிறகு, தான் நெருப்பு மூட்டாமல் அவருக்குப் பத்தியப்படாது. தென்னம் பொச்சுக்களையும், தும்புத் தூசிகளையும் சேர்த்து வைத்து விட்டு, இரு காலாலும் கட்டையை அணைத்துப் பிடித்தபடி மத்தில் தயிர் கடைவதைப் போல உருட்டுவார். ● பொச்சில் தீ மூண்டதும் குழந்தைபோற் சிரிப்பார்.

அனேகமாகத் தீத்தட்டுக் கட்டைகள் இல்லாத வீடில்லை. அவசியம் என்றால் தான் பயன்படுத்தப்படும். காலையில் அடுப்பில் நெருப்புப் பற்ற வைத்தால் இரவு படுக்கைக்குப் போகும் வரை தொடர்ந்து இருக்கும். விறகுக்குத்தானே பஞ்சமில்லை!

இரவு நெருப்பு அணைந்துவிடும். அதற்காக படுக்கைக்குப் போகும் போது, ஒரு ● ஏதனத்துக்குள் உமி போட்டு நெருப்பு அணையாமல் பாதுகாக்கப்படும். இதற்கென்று நெல்உமி, வரகுஉமி, தினைஉமி எல்லாம் சேர்த்து வைத்திருப்பார்கள்.

இருள் சூழ்ந்த மழை நாட்களில் வெளியே செல்வது பயமாக இருக்கும். ● குறுக்காலையும் மறுக்காலையும் ஓடும் பாம்பு பூச்சியளிடம் கடிவாங்க நேரும். ஒற்றையடிப் பாதைகளைக் கண்டு பிடிப்பதே கஸ்டம்.

வெள்ளத்துக்காலையும்சேத்துக்காலையும் ● மிதியடி போட்டுக்கொண்டு போகேலாது. புதைந்து விடும்.

இப்படியான நாட்களில்தான் சூள்களின் பலன் தெரியும். எப்பவும், எங்கேயும் சூள்கள் பயன்பட்டன. சூள் தென்னம் பாளையில் செய்யப்படும்.

முகத்தாரப்பா நல்லாய்ச் சூள் செய்வார். தென்னம் பாளையை நார் நாராகக் கிழித்து, அவற்றை ஒன்றாய்ச் சேர்த்துப் பின்னி, எரியும் போது உதிராத வண்ணம் அருமையாய்ச் செய்வார் அவர்.

முகத்தாரப்பா செய்த சூளை இங்காலும் அங்காலுமாகக் காற்றில் சுழற்றியபடி செல்லும்போது, ஆட்களின் நிழல் தெரியுமளவிற்கு வெளிச்சமாய் இருக்கும். இரவில் சூள் கொண்டு போகும் போது தூரத்தே வருபவர்கள் கொள்ளிவால்ப் பேய் என்றுதான் நினைப்பார்கள்.

கொள்ளிவால்ப்பேயைத் தான் பார்த்ததாக முகத்தாரப்பா சொன்னார். அவர் பொடியனாய் இருந்த காலத்தில் இது நடந்தது. அன்றைக்குப் பினாக்கை வெளியில் காத்தான் கூத்து. அவரோடு தோட்டக் காவல் இருப்பவர்கள் எல்லோரும் கூத்துப் பார்க்கச் சென்றுவிட்டனர். தேரட்டித் தோட்டத்தில் இரவு தனியக் காவல்.

தென்னம் பாளைச் சூளைக் கொழுத்தி, கையில் பிடித்து ஆட்டியபடி போனார். ● தவக்கைகளும் பாம்புகளும் கத்திக் கொண்டிருந்தன. தேரட்டி வெளியில் நின்று பார்க்கும் போது விள்ளானைச் சுடலைப் பக்கம் இருளாக இருந்தது.

திடீரென்று சுடலை நேருக்கு ஒளியொன்று தெரிந்தது. யாரோ சூள் கொண்டுபோவது போலிருந்தது. வடிவாகக் கூர்ந்து பார்த்தார். சூள் போல அல்லாமல் ஒரு தலையும் அதற்குக் கீழே வாலுமாய்...... வால் பேத்தை போல. நெருப்புத் தணலாக அது இருந்தது. ஒரு சீரான வேகத்துடன் உயர்ந்து செல்வது போல இருந்தது. பட்டென்று ஒன்றையும் காணவில்லை. ஒரே இருளாக மாறியது.

முகத்தாரப்பாவுக்கு விளங்கி விட்டது; கொள்ளிவால் பேய்தான்! இதயம் படபடவென அடித்துக் கொண்டது.

சற்றுத் தள்ளித்தான் வைரவர் கோயில் இருந்தது. ''அப்பனே வைரவா...... என்னைக் காப்பாத்து'' சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் ஓடி வந்தார்.

வந்து தலைவாசல் குந்தில் சரிந்தவர் தான் ...... அடுத்தநாள் காய்ச்சலில் வீழ்ந்தார். (வரும்)

□□

---

● பொச்சு - தேங்காயின் வெளியுறை
● குறுக்கும்மறுக்கும் - இங்கும் அங்கும்
● ஏதனம் - பாத்திரம்
● மிதியடி - மரத்தாலான பாதணி
● தவக்கை - தவளை

கலாநிதி
சபா. ஜெயராசா

# படிமங்கள் ஒரு மீள் பார்வை

கலை வெளிப்பாட்டிலும் மொழி வெளிப்பாட்டிலும் படிமங்கள் வகிக்கும் பண்புகள் மீளாய்வுக்குரியன. படிமங்கள் ''அறிகைக் காட்சிகளை'' உருவாக்குகின்றன. கலை வெளிப்பாட்டைச் செழுமைப்படுத்துகின்றன. கலையூட்டம் செய்கின்றன — அறிவுப்புதுப்பித்தலை மேற்கொள்ளுகின்றன. மனவெழுச்சிகளுக்கும் கற்பனைகளுக்கும் படிமங்கள் வடிவமைக்கின்றன.

ஆக்கச்செயல்முறையுடன் படிமங்கள் இணைந்தவை. காட்டுருக்கள் வடிவிலான கருத்து வெளிப்பாடு படிமங்களின் விரிவுபட்ட வடிவம் என்று குறிப்பிடப்படும். ''காவிச் செல்லல்'', ''கருத்து'' என்ற இரண்டு பண்புகளின் இடவினைகளைப் படிமங்கள் கொண்டுள்ளன. கருத்து என்பது இருநிலை வழிநிலைகளாக இடம் பெறும். ஒன்று அறிகைக் கருத்து *(Cognitive meaning)*. மற்றையது எழுச்சிக் கருத்து *(Emotive meaning)*. காவிச் செல்லுகை என்பது கலை உபாயங்களைக் கொண்ட செயற்பாடு. உவமை, உருவகம் என்பவற்றைக் கடந்து நிற்கும் மேலான ஓர் உள வடிவமாகப் படிமம் *(Imagery)* அமையும்.

''படிம ஆக்கம்'' என்பது முடிவில்லாத ஒரு செயல்முறை. உளவியல், மொழியியல், அழகியல் என்ற பெருந்துறைகளை இணைக்கும் ஆக்கச்செயல்முறையாக அது விளங்குகின்றது. பாகுபாடுகளையும் வரம்புகளையும் மீறிச் செயற்படுவதால் படிமங்கள் ஆழ்ந்த உளவியற் பதிவுகளை ஏற்படுத்துகின்றன. ''நீர்யானையின் கண்கள்'' என்ற படிமத்தின் வாயிலாகப் பேராசைக்காரனின் மன உழைச்சலைக் கதாசிரியர் சித்தரிக்கும் பொழுது அங்கு இடம்பெறும் இரண்டு தனிமங்களும் வேறு வேறு பாகுபாடுகளின் வழிப்படுவன. ஆனால் இந்தப் படிமத்தில் பாகுபாட்டு வரம்புகளையும் மீறிய ஒருவித பிணைப்பு ஏற்படுத்தப்படுகின்றது. பூர்வீகக் கதைகளிலும், ஐதிகங்களிலும், இவற்றின் வேர்களைக் காணலாம். பாகுபாட்டின் வரம்புகள் மீறப்படும் பொழுது எண்ணக்கருவின் எல்லைகள் மீறப்படுகின்றன. ''ஆடிவரும் தேனே'' என்ற பாரதியின் படிமத்தில் 'தேன்' என்ற பாரம்பரிய எண்ணக்கருவின் எல்லை மீறப்படுகின்றது.

இவ்வாறாக வரம்புகள் மீறி ஆக்கப்படும் படிமங்கள் தாராண்மைப் படிமங்கள் அல்லது ''நெகிழ் படிமங்கள்'' என்று குறிப்பிடப்படும். தொடர்ந்து அவை பழக்கத்துக்கு உள்ளாகும் பொழுது மரபுப் படிமங்களாக மாற்றமடையும். வேறுபட்ட இரண்டு துறைகள் படிமவாக்கத்தின் பொருட்டு ஒன்றிணைக்கப்படும் பொழுது இரண்டு கூறுகளுக்குமிடையே எதிர் ஏற்றமும், நேர் ஏற்றமும் ஏற்படுதல் உண்டு. இவற்றின் தொகுப்பினூடே ஒரு செயலமைப்பாகப் *(System)* படிமங்கள் முகிழ்ந்தெழுகின்றன. இந்தச் செயல்முறையின் போது மொழிக்குரிய இலக்கண விதிகள் மீறப்படுதல் உண்டு.

இந்நிலையிற் படிமங்கள் இரண்டு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுதல் உண்டு. அவை:

(1) குறித்த சந்தர்ப்ப நிலைகளிலே வீரியத்துடன் தொழிற்படும் படிமங்கள்.

(2) எந்தச் சந்தர்ப்பங்களிலும் தொழிற்படக்கூடிய படிமங்கள்.

படிமங்களில் அதன் அயற்கலைப் பண்புகளின் செல்வாக்கு முக்கியமானதாகும். அயற்கலைப்பண்பு என்பது படிமத்துக்கு வலுவூட்டும் ''பின்புலம்'' என்றும் குறிப்பிடப்படும். வரையறுக்கப்பட்ட உளவியற் பின்புலம் இன்றி எங்கும் தொழிற்படக்கூடிய படிமங்கள் ''அகிலப் படிமங்கள்'' என்று குறிப்பிடப்படும்.

தீவிரமான படிமம் என்பது மொழியமைப்பின் விலகிய வடிவம் *(Deviance)* என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. தனித்துப் படிம இன்பங்களில் ஈடுபடுவோர் அதனைச் சிறப்பார்ந்த வடிவம் என்று குறிப்பிடுவர். மொழியின் அசைவியக்க வீச்சுக்களில் நம்பிக்கையற்றோர் படிமம் ''விலகிய வடிவம்'' என்ற கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர். வினைத்திறனுடைய தொடர்பாடல் படிமங்களினூடாக மேற்கொள்ளப்படுவதால் அவை இலக்கண நிலைப்பட்ட சிக்கலான பெறுமானங்களை எடுக்கின்றன. இந்நூற்றாண்டில் தமிழில் மிகக் கூடுதலான படிமங்களை உருவாக்கிய கவிஞர்கள் வரிசையில் பாரதியார் சிறப்பிடம் பெறுகின்றார் என்று கூறும் பொழுது, மொழி இறுக்கத்தைக் கடைப்பிடித்தோர் அவரை இலக்கண அமைதிக்கு உட்பட்ட கவிஞராக ஆரம்ப காலத்திற் கருதவில்லை.

பாரதியாருக்குப் பின்னர் புதுக்கவிதை இலக்கியங்களில் ஈடுபட்டோர் மிகையான படிமவாக்கங்களில் ஈடுபட்டவேளை மரபுவாதிகளின் எதிர்ப்புக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

இலக்கியங்களிற் படிமங்கள், மொழியின் கனவு வேலை *(Dream work)* என்று குறிப்பிடப்படும். கலைகளில் அது கனவுச் சுட்டி *(Dream Index)* என்றும், குறிப்பிடப்படும். இவற்றினூடாகப் புதிய தேடல் முன்னெடுக்கப்படுகின்றது. உளப்பகுப்புக் கோட்பாட்டாளர்களது கண்ணோட்டத்தில் படிமங்கள் நனவிலி மனத்துடன் தொடர்புபட்டு நிற்பதனால் இவ்வாறான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.

சமூக இயக்கத்தின் பின்புலத்தில் படிமங்களின் ஆக்கங்களை விளக்க முடியும். இயற்கையும், சமூகமும் தொடர்சியான மாற்றங்களுக்குரியவை. இந்த மாற்றங்களினூடே ''புதுப்பித்தல்'' என்ற நிகழ்ச்சி ஏற்படுகின்றது. மொழியில் நிகழும் படிமவாக்கம் ஒருவிதமான ''புதுப்பித்தல்'' நிகழ்ச்சியாகும். புதிய சிந்தனைகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தப் பழைய ஊடகங்களின் போதாமையில் புதிய படிமங்களின் ஆக்கம் வலுப்பெறத் தொடங்குகின்றது. படிமங்களினூடாகக் கலைத் தகவல்கள் மட்டும் பரிமாற்றம் செய்யப்படுவதில்லை. அதனூடாக சமூக வேர்களுடன் இணைந்த உள்ளடக்கமும் வழங்கப்படுகின்றது. இதனை மேலும் விளக்குவதானால், படிமம் என்பது தகவலின் ஒரு துணிக்கையாகவோ, தனித்துப்பிரிந்த ஒரு கூறாகவோ பரிமாறப்படுவதில்லை. அது உள்ளடக்கத்துடன் வலைப்பின்னலாக இணைந்து நிற்கும். தொடர்பியலில் இதனை ''பின்னற்கூடாக்கல்'' (*NESTING*) என்ற எண்ணக்கருவால் விளக்குவர்.

தகவல் அடிப்படையிலும் படிமங்களை விளக்கலாம். பேழைத் தகவல்கள், மீப்பேழைத் தகவல்கள் என்ற பாகுபாடு இங்கு குறிப்பிடத்தக்கது. பேழைத்தகவ

லில் நன்கு வரையறுக்கப்பட்ட எண்ணக் கருக்கள் தகவலின் வழியாகக் கையளிக்கப் படும். இங்கு தகவல்கள் பிரித்தெடுக்கப் படத்தக்க அலகுகளாக இருக்கும். ஆனால் மீப்பேழைத் தகவலில் வரையறுக்கப்பட்ட எண்ணக் கருக்களையும் கடந்த தொடர் கருத்துக்கள் பரிமாற்றம் செய்யப்படும். இங்கு தகவல்கள் ஒழுகும் அலகுகளாக இருக்கும். அதாவது,

பேழை — *Shell Nested Digital* - பிரியலகு
மீப்பேழை — *Amalogue* - ஒழுகலகு

தகவல் அடிப்படையில் படிமங்களை விளக்குவதானால் அது மீப்பேழை வடிவுடையதாக இருக்கும். அதாவது ஒழுகலகுப் பண்பைக் கொண்டிருக்கும்.

உதாரணமாக பாரதியின் "அக்கினிக் குஞ்சு" என்ற படிமத்தை எடுத்துக் கொண்டால் அதில் எண்ணக்கருவறைகளையும் கடந்த மேலான (மீப்பேழை) அனுபவங்கள் வாசகருக்குக் கையளிக்கப் படுகின்றன. அதாவது திட்டவட்டமான கருத்துக்களையும் மீறிய கருத்தேற்றமும் கருத்துப்பாய்ச்சலும் அங்கு ஏற்படுகின்றன.

சமகாலக் கலை இலக்கியங்களை ஆராய்வதற்குரிய அடிக்கட்டுமான வேலைகளைச் செய்யும் பொழுது படிமங்கள் பற்றிய கலைப்பார்வையைத் தெளிவு படுத்த வேண்டியுள்ளது. □□

---

□ உருவகம்

## இன்பவிழிப்பு

— நாகபத்மநாதன்

அது என்ன?
படமா?

நான்கு கரையும் போடப் பட்ட சட்டத்துள் அடங்கி நிற்கும் ஏதோ ஒரு படமா?

இதற்கு அப்பால் அது நின்றது!

பதிக்கப்பட்ட ஒரு படத்தை அணிந்து அதைச் சுற்றி இடப்பட்ட சட்டத்தின் வரைவுக்குள் அது நிற்கவில்லை! தனித்துவமாய் நின்றது!

எட்டிய எதையும் சுட்டிக்காட்டும் இயல்போடு நின்றது! அதன் தெளிந்த தெளிவிலே ஓர் அழகு!

அதை 'நிலைக்கண்ணாடி' எனக்கூற என்மனம் இசையவே இல்லை!

அதனை அணுகி நின்றேன்.

அது நானாக நின்றது; நான் 'அதனாக' நிற்பதை உணர்ந்தேன்!

மெய்சிலிர்ப்பு!

பகல் இரவாகியது. இருளைக் கலைக்கும் நிலவு கூட அங்கில்லை!

நல்லதேயான இருள்!

என்ன? அங்கே உடன் ஒரு உள்ளொளியா?

மௌனம் பேசுகிறது;

நிலைக்கண்ணாடி உலகின் அளவாய்த் தெரிகிறது!

அது 'மணாளா' எனவில்லை!

'மகனே' என்கிறது. 'மைந்தனே' என்கிறது!

'உன் சிறு இன்பத்தையல்ல, உலகின் துயரத்தைப் பார்' என்கிறது!

மொட்டுக்கள் மலர முயல்கின்றன. விதைகள் முளைத்து எழ முயல்கின்றன. காற்று அலைகளையும் முகில்களையும் தொட்டு வீசி எழுகின்றது! ஆகா, எங்கும் உயிர்ப்பு! எங்கும் உறுதி! எதிலும் சுதந்திர இன்பம்!

'இவை தடைப்படும் போது துன்பம், விடுபடும் போது இன்பம்'

'அதற்குப் பெயர் என்ன?' என வினவியது என் மனம்.

'சுயம், அல்லது சுதந்திரம்! இதற்கென உழைப்பதே இதயம் காண் இன்பம்!'

இது எங்கும் வீசிய இன்பம் தெரிந்தது!

'துன்பம் எது?'

'அடங்கிக் கிடப்பது. அடங்கி வாழ்வது. மாற்றானின் இச்சைப்படி நீ வாழ முயல்வது.'

'சீ!' என்றது மனம்.

விழித்தேன்! □□



# தீர்வு

புு. சத்தியமூர்த்தி

மூச்சு வாங்குகிறது. உயர்ந்து எழும் அலைகளுடன் போராடி நீந்த முடியாமல் சிலுவைராசா தவித்தான். அவன் இன்று நேற்று அலைகளோடு பழகுபவன் என்று நினைத்தால் அதைவிடத் தவறு வேறொன்றும் இருக்கமுடியாது. சிலுவை தவழ்ந்து விளையாடியது கடற்கரையில். சிறுவர்களாக அவனும் நண்பர்களும் விளையாடியதும் அலை மடியில் அந்தளவுக்கு அவனது வாழ்வில் அலைகளிற்கு முக்கிய பங்குண்டு. அப்படியானவன் இன்று அலையில் தவித்துக்கொண்டிருக்கிறான்.

ஒருமுறை தொழிலுக்குப் போனபோது கடலில் கொஞ்சம் உயரப் போய் விட்டான். ஒரு கிழமையாகக் கடல் ''அடி'' யால் தொழிலுக்குப் போகாததால் வீடு பட்டபாட்டில் மனது கிடந்து உழல, தொழிலுக்காக உயரப் போனவனுக்கு தூரத்தில் ''கறுப்பு!''த் தெரியத் தொடங்கிய போதுதான் நெஞ்சுக்கூட்டுக்குள் ஐஸ் கட்டிகள் உருக ஆரம்பித்தன. ''கறுப்பில்'' இருந்து ''அவன்'' போகஸ்லைற் அடிக்க, கட்டுமரத்தை விட்டுப் பாய்ந்தவனை போகஸ் வெளிச்சம் தெளிவாகக் காட்டி விட்டது. தலைக்கு மேலால் உரசிக் கொண்டு வந்த குண்டுகளுக்கு மத்தியிலும் நீந்திக் கரைக்கு வந்து சேர்ந்தவன் சிலுவைராசா. அவன் இன்று அலையின் மீது தத்தளிக்கிறான்.

90-ம் ஆண்டின் பிற்பகுதி திரும்பவும் எங்கள் வானில் அந்நிய வரவால், கட்டிய வீட்டில் இருக்க முடியாது வெட்டிய பங்கர்களில் நாங்கள் பதுங்கிய போது இந்தியாவுக்கென்று ஓடியவர்களைக் காவிச் சென்ற படகொன்றிற்கு சிலுவைராசா ஓட்டியாகப் போனான். நடுக்கடலில் அவன் ஓட்டிய படகு வெடித்துச் சிதற, தான் கொண்டுபோன சனத்தில் இரண்டு பேருடன் அடுத்த நாள் கரையேறினான்.

மனத்தில் பாரம் மிகுந்தால் சிலுவை அழுவதும் கடற்கரையில்தான். மனம் மகிழும்நிலையில் இருந்தால் சிரிப்பதும் அலைக் கரையில் தான். அவர்களை அடிப்பதும் அணைப்பதும் கடலம்மாதான். அந்தக் கடலன்னையின் மடியிலேயே இன்று புதைந்து போக நேரிடுமோ என எண்ணுமளவுக்கு அவன் சோர்ந்து போயிருந்தான். எதுவும் செய்யமுடியாமல் தன்னை ஆசுவாசப்படுத்த மல்லாந்து மிதக்கத் தொடங்கினான்.

''கடலில் பகல்நேரத்தில் மீன்பிடிக்க தடை நீக்கப்பட்டுள்ளது'' என்று ஸ்ரீலங்கா வானொலிவரிந்து கட்டிக்கொண்டு முழக்கமிட்டதைக் கேட்டு எல்லா மீனவர்களைப் போலவே அவனும் மனம் மகிழ்ந்தான் ஆனால் சவரிமுத்துக்கிழவரும் ஞானமுத்துச் சம்மட்டியாரும் ''பகல்ல தொழிலுக்குப் போனா, சந்தை இரவிலேயேகூடுறது? பிடிக்கிற மீனை நாங்க என்னவாக்கும் செய்யிற?'' என்று சினந்து கொள்கின்றனர். அதன் பின்னர் தான் சிலுவை யோசித்தான். ''உண்மைதான், நாங்கள் ஒண்டையும் ஆழமா பாக்கிறதில்லை. அவன் சொன்ன உடனே அதை நல்லதெண்டு நம்புறது. இப்ப என்ன; கடலில வைச்சு எங்களுக்கு சிலநேரம் அடிக்காம விடு

வான். அது மட்டுந்தானே அதோட ரெண்டு கட்டை உயரத்துக்குத்தான் தொழிலுக்குப் போகலாமாம். எங்கட கடலில நாங்க இவளவு தூரந்தான் போகலாமெண்டு சொல்ல உவங்கள் ஆர்?''

சவரிமுத்தர் மேலும் உரக்கப்பேசுகிறார். ''இங்க பேசுறதுக்கெண்டு வந்த இடத்தில பேப்பர்காரனுக்கு சொல்லக்குள்ள எல்லாக்கடலிலயும் எல்லா நேரத்திலயும் தொழில் செய்யலாமெண்டிட்டு இப்ப அங்கபோன உடனரெண்டு கட்டை உயரத்தில மட்டும் அதுவும் பகல் நேரத்தில தான். கயிறு கட்டிவிட்டது மாதிரி இவளவு, இவளவு இடத்தில தொழிலைச் செய் எண்டு சொல்லுறது என்ன ஞாயம்?''

''சில கஞ்சல் பேர்வழியள் பிச்சைக்காறனுக்கு அம்பது சதத்தைப் போட்டிட்டு இருவத்தஞ்சு சதத்த எடுக்கிற மாதிரியெல்லே நடக்குது!'' ஞானமுத்துச் சம்மாட்டியார் சவரிமுத்தரை எதிரொலிக்கிறார். சிலுவைராசாவுக்கு பொறி தட்டுகிறது. ''அப்ப நாங்களெல்லாம் பிச்சைக்காறரே? எங்கட குஞ்சுகுருமன் எல்லாம் சண்டையில நிக்குதுகள். இது எங்களில வாயாது கண்டியளோ, சம்மாட்டியார். இப்ப இருக்கிறவை பழய ஆக்களில்லை நினைப்பு இருக்கட்டும்.'' சற்று ஆங்காரமாகவே, தனக்கும் அவருக்குமுள்ள தொழிலிலான சம்மாட்டி, தொழிலாளி உறவையும் மறந்து குமுறி விடுகிறான்.

இன்ன இன்ன இடத்தில் பகலில் தொழில் செய்யலாம் என்ற அறிவிப்பு வெளியானபின் இன்றுதான் கடலில் இறங்குகிறான். இவ்வளவு நாளும் வீச்சு வலையுடனும் கட்டு மரத்துடனும் நின்றவன், வள்ளத்தைக் கடலில் இறக்கினான். மனைவி திரேசம்மாவும் பிள்ளைகளும் கரையில் நிற்கின்றனர். கூடவே தொழிலுக்கு வரும் மைத்துனன் அந்தோனியுடன் சேர்ந்து வள்ளத்தைத் தள்ளிக் கடலில் இறக்கி, வள்ளத்தில் ஏறி கம்பால் தாங்கியவாறே கரையைப் பார்த்துக் கையை அசைத்தான்.

வழமையாக, ''ஊர் உறங்கும் சாமத்தில்', போகும் தொழிலுக்கு, தரைக்காற்று உதவும். பாய் விரித்துப் போகலாம். எண்ணெய்த் தட்டுப்பாட்டிலும் நின்று பிடிக்க முடிந்தது. இப்போது பகலில் போவதற்கு கடற்காற்று எதிர்க்கும். பாய் விரிக்கவும் முடியாது. தாங்கி வலிக்க வேண்டும்.

நீண்ட நாட்களுக்குப் பின் ஓரளவு மனப்பதற்றமின்றி வலை இழுத்துக் கொண்டிருந்தார்கள் அந்தோனியும் சிலுவைராசாவும். சூரியன் தலைக்கு மேலே எரிந்துக்கொண்டிருந்தான். இதுவும்கூட ஒரு புதிய அனுபவந்தானோ? எங்கள் வாழ்க்கையில்தான் எத்தனை புதிய அனுபவங்கள்!

திடீரென்று அந்தோனி கத்தினான். ''மச்சான் சிலுவை! வாறாங்களடா'' தூரத்தில் 'நேவி' போட் விரைந்து அலைகளைப் பிளந்துகொண்டு தாவி வருவது தெளிவாகத் தெரிந்தது. சிலுவை நிதானித்துக்கொண்டே ''அந்தோனி அவன் எங்களைக் கண்டிட்டான். பகல்நேரம் பாயேலாது. பாஞ்சாலும் விடாங்கள். ஆண்டவரை நினைச்சு செபிச்சுக் கொண்டு வள்ளத்திலேயே இருப்பம். அந்தோனிக்கிழவா'' மெதுவாகச் சொல்லிக் கொண்டான்.

கண்கள் கட்டப்பட்டு நடத்திச் செல்லப்படுவதை மட்டுமே சிலுவை உணர்ந்தான். ''என்ன நடக்கும்'' என்று அவன் நினைக்க விரும்பவில்லை ''எது வந்தாலும்என்ன'' என்ற கர்மயோக நிலைக்கு வந்துவிட்டான் சிலுவைராசா.

''ம். இங்க நில்லுங்க'' தனித்தமிழில் வந்தது கட்டளை. ''இதென்ன இவங்

கள் இவளவு சுத்தமா தமிழில கதைக்கிறாங்கள். முதல் எங்களை விசாரிச்ச நேவிப் பெரியவன் கொச்சைத் தமிழ்தானே கதைச்சவன்'' வியந்து கொள்கிறான் சிலுவை. கண்கட்டுக்கள் அவிழ்க்கப்பட்ட பின் சற்றுநேரம் கண்களில்பல நிற ஒளிப்பொட்டுக்கள் விளையாடின. கண்பார்வை சரியானதும்தான் சிலுவைராசாவால் உணரமுடிந்தது தான் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பது ஏதோ ஒரு தமிழ்க்குழுவின் உறுப்பினர்களால் என்பதை. இப்போது அவனுக்கு தனது உயிரின் நிரந்தரமின்மை புலனாக சலஞ்சலமாக வியர்த்து ஊத்தியது. தேகம் தன்னை மீறி நடுங்கியது. இவனில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு கொண்டதாலோ என்னவோ எழுத்தில் தர முடியாத வார்த்தைப் பிரயோகங்களுடன் சிலுவை நையப்புடைக்கப்பட்டான். சிறிது நேரம் ''ஐயா அடியாதையுங்கோ .. ஐயோ... ஆண்டவரே நாங்கள் தொழில்காறர் '' என்று ஈனமாக அலறியவன் பின்னர் நினைவிழந்து போனான்.

நினைவு திரும்பி இரண்டு நாட்களின் பின் சிலுவைராசா ஒரு கடற்படைக்கலத்தில் ஏற்றப்பட்டான். காற்றிலாடியதேகம் ''என்ன நடக்குமோ'' என்று பதறியது. கொஞ்சத் தூரம் நடக்கவே மூச்சு வாங்கியது. உறுமிக் கொண்டு புறப்பட்ட கலம் நடுக்கடலில் சிலுவையைத் தள்ளிவிட்டு வட்டமடித்துக்கொண்டு திரும்பிப் போனது. கொஞ்ச நேரம் தத்தளித்த சிலுவைராசா சமாளித்துக் கொண்டு கையை மாற்றிப்போட்டு நீந்தமுற்பட்டான்.

● ●

அயல் வீட்டு றேடியோவில் ஸ்ரீலங்கா வானொலியின் விசேட ஒலிபரப்பு போய்க் கொண்டிருந்தது. திருகோணமலையில் கப்பற்துறை மாதிரிக் கிராம திறப்பு விழாவில் ''மீன் பிடித் தடை நீக்கப்பட்டுள்ளதால் வடபகுதி மீனவர்கள் பல வருடங்களாக அனுபவித்து வந்த கஸ்ரங்கள் முற்றாகத் தீர்க்கப்பட்டுள்ளன. வடக்கு மக்கள் இதையிட்டு மிகவும் மகிழ்கிறார்கள்' தங்கள் ஜனாதிபதி பேசியதாக முழங்கியது வானொலி. தொழிலுக்குப்போன தன் கணவன் சிலுவைராசாவும் தம்பி அந்தோனியும் ஐந்து நாளாகியும் திரும்பாததை நினைத்துப் புலம்பிக் கொண்டிருந்த திரேசம்மா மண் அள்ளித்திட்டினாள். ''கண்கெடுவார், நாக்கழுகிப் போவார்.''

□□

அச்சுக்கலையில்
பலவருட அனுபவம் வாய்ந்தவர்கள்

உங்கள் தேவையறிந்து
சேவை செய்பவர்கள்

**திருமகள் அழுத்தகம்**
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

# பச்சைச் சட்டை

மூலம்:

தோ ஹூ (*TO huu*)

ஆங்கிலம் வழி தமிழில்

**சாந்தன்**

பதினாறாவது வயதிலேயே போராட்ட வாழ்வினுள் நுழைந்த தோ ஹூ, தமது 25 வது வயதில் வெற்றிகரமான ஆயுத எழுச்சியொன்றிற்குத் தலைமை தாங்கினார். 40 வது வயதில், வியட்னாம் விடுதலைப் போராட்டத்தின் தலைவர்களில் ஒருவரானார். தோ ஹூ – வின் கவிதைகள் நம்பிக்கையும் துணிவும் ஊட்டுபவை.

☐ *வியட்நாமியக் கவிதை*

*என் சட்டைக்குச் சாயமிடு*
*இன்னுமொரு தரம்,*
*இலைப் பச்சை நிறத்தில்*
*என் அன்பே,*
*வெள்ளை அணிவது*
*வழக்கமல்ல, போரில்.*
*காற்றுக்குள்ளும் கடும் மழையினூடும்*
*இன்னுமொருதரம்*
*நான் போகவேண்டும் –*
*தோளில் துவக்குடன்*
*வெற்றிப் பச்சையில்*
*சட்டை அணிந்து.*

*முடிவற்று முழங்கும்*
*குண்டிலும் ஷெல்லிலும்*
*இடைவெளியற்ற*
*இறப்புக்கள் நடுவிலும்*
*நான் திரும்புவேன்*
*எந்தன் ஊரின்*
*இனிய பசுமையில்*
*என் துயர் மறக்க.*

*எனக்காக*
*நீ சாயமிடும் சட்டை*
*என் தோலோடு உரசும்*
*எப்போதும்.*
*எனக்கது உயிர்ப்பூட்டும்,*
*எங்கள் காதலின் வசந்தம் போல*
*எப்போதும்*
*அது பசுமையேதான்.* ☐☐

## நேர்காணல்



சிரித்திரன் சுந்தருக்குப் பிறகு கருத்தோவியத்தின் மூலம் சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டியவர். எமது சூழலில் அரசியல் பரிமாணம் மிக்கனவாக இவரது கார்ட்டூன்கள் விளங்குகின்றன.

பழையனவற்றின் தளத்தில் நின்று கொண்டு நவீனத்தை எட்டித்தொடும் ஆவலும், ஆற்றலும் நிறைந்த இளந்தலை முறைக் கலைஞராக தயா அடையாளம் காட்டுகிறார்.

தயாவின் புதிய சிந்தனைகளும், புதிய வெளிப்பாட்டு முறைமையும் நல்லதொரு ஓவிய எதிர் காலத்தை தமிழீழத்துக்கு வழங்குமென எதிர் பார்க்கலாம்.

# ஓவியர் தயா

நேர்முகம்

கருணாகரன்

இன்று பரவலாக எல்லாத் தரப்பினரிடையேயும் விதந்து பேசப்படும் ஓவியராக தயா (தி. தயானந்தம்) விளங்குகிறார். 'ஓவியம் உயர்ந்தோர் மாட்டே' என்ற கருத்தைப் பொய்யாக்கி, பாமரரும் புரிந்து கொள்ளக் கூடியதாக வரைதலை ஒரு பண்பாக்கிய பெருமை இவரைச்சாரும்.

எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஓவியத்துறையில் பெரும் பங்காற்றி வருபவர் இவரென்று 'வெளிச்சம்' கருதுகிறது. இளம் வயதிலேயே ஞானமும், வரைதலில் லாவகமும், சிந்திப்புத்திறனும்,சிந்தித்ததைத் தெளிவாக வெளிப்படுத்தும் முறைமையும் இவரது தனித்துவத்துக்கு அடித்தளமானவை.

● *ஈழத்து நவீன ஓவியத்தில் ஒரு புதியவருகையாக உங்கள் ஓவியங்கள் அமைகின்றன. இதில் உங்கள் ஓவியங்களுக்கான தனிப்பண்புகள் என எதைக் கருதுகிறீர்கள்?*

□ *உணர்வுகளை, கருத்துக்களை எப்படியெல்லாம், எந்த முறைகளிலெல்லாம் ஓவியத்தளத்தினூடு வெளிப்படுத்த முடியுமோ அவ்வாறெல்லாம் முயற்சி செய்கிறேன். பல்வேறு விதமான கோட்டு வரைவுகளாகவும், வர்ண ஓவியங்களாகவும் அவை இருக்கின்றன. இங்கு நான் எந்த வகையான வரையறைகளையும் யோசிப்பதில்லை.*

முடிவு எனக்குத் திருப்தியைக் கொடுத்தால் சரி.
எமக்கென ஒரு தனிப்பண்பு, பாணி என்பனவெல்லாம் ஒரு வளர்ச்சிநிலையில் எம்மை அறியாமலே எமது படைப்புகளில் தோற்றம் கொள்ளும்.

இங்கு எமக்கென்றான பாணி என்பது ஒரு நிலையில் எமது படைப்பாற்றல் சுயாதீனத்தை சிறைப்படுத்தும் ஒன்றாக இருப்பதை நான் விரும்பவில்லை.

● **உங்கள் அநேக ஓவியங்கள் நவீன ஓவியங்களாகவே இருக்கின்றன. தத்ரூப ஓவியங்களை விட நவீனத்தைஏன் கையாளுகின்றீர்கள்?**

☐ கட்டற்ற முறையில் உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியதான சந்தர்ப்பத்தையே நவீன ஓவியம் எமக்கு வழங்குகிறது. சதா தேடலிலும், புதியதான சிந்தனையுடனும் இயங்கும் ஓவியன் ஒருவன் இதையே விரும்பி நிற்பான்.

தத்ரூப ஓவிய முறைமை மூலம் ஒரு வரையறைக்கப்பால் வெளிப்பாடு ஒன்றை வெளிக்கொணர முடியாது. கற்பனை வளத்துடனும் மிகுந்த சுதந்திரத்துடனும் உணர்வுகளை வெளிப்படுத்தும் நவீன ஓவியங்களே படைப்பாற்றல் வலிமை வாய்ந்தனவாகும்.

● **அவலங்களைச் சித்திரிக்கும் போது அது சிறந்த கலையாக உள்ளதென்றும், எழுச்சி, எதிர்ப்புணர்வு என்பவற்றைச் சித்திரிக்கும்போது அவை பிரச்சாரமென்றும் பரவலான ஒரு கருத்து உண்டு. இதுபற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**



☐ அவலங்கள் என்றாலென்ன, எழுச்சி' எதிர்ப்புணர்வு என்றாலென்ன அவற்றை வெளிப்படுத்தும் படைப்புகள் எவ்வளவுக்கு கலையாக்கம் பெறுகின்றன என்பதிலேயே இது தங்கியுள்ளது. பிரச்சாரத்தன்மை வாய்ந்த அவலச்சித்திரிப்புகளும் இருக்கின்றனவே! அவலங்கள் எல்லோருக்கும் பொதுவான உணர்வை வழங்குவன. ஆனால் எழுச்சி, எதிர்ப்புணர்வு என்னும்போது அதற்குரிய மனோபலம் வித்தியாசப்படுகிறது. எனவே, இந்த நிலையில் ரசனை, கருத்துநிலை என்பனவும் வேறுபடுகிறது.

● **“நமது இன்றைய ஓவியங்கள் பரந்த, ஆழமான தளங்களில் இல்லை. ஒரே தன்மையான பொருட்தன்மையும், உணர்வுமே காணப்படுகிறது” என்றொரு குற்றச்சாட்டு உள்ளது. இது பற்றிய உங்கள் கருத்தென்ன?**

□ குண்டு வீச்சைப்பற்றிச் சொல்லும்போது நீங்கள் ஒரு குண்டு வீச்சுச் சம்பவத்தைத்தான் ஊகிப்பீர்கள். ஆனாலும் ஒவ்வொரு தடவை குண்டுவீச்சு நிகழும்போதும் வெவ்வேறான விபரிக்க முடியாத உணர்வுகளும் தாக்கங்களும் ஏற்படுகின்றதல்லவா? பொதுவாகப் பார்க்கும்போது குண்டு வீச்சு என்ற ஒரு சொல்லையே உணரமுடியும். தனித்தனியாக, ஆழ்ந்து பார்க்கும்போது ஒவ்வொன்றின் சந்தர்ப்பமும் ஒவ்வொரு விதமானவை, அநுபவங்களும் வேறுபட்டவை.

நமது ஓவியங்கள் போராட்டம் என்ற மிக முக்கியமான சூழலில் ஒன்றித்த சாரமாக அமைவது தவிர்க்க முடியாதது. இது எந்தக் கலைக்கும் பொதுவானதாக இருக்கும். ஆனால் கவனித்துப் பார்க்கும்போது ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டிருப்பதை உணரமுடியும்.

எனினும், இன்னும் பரந்தும் ஆழமாகவும் நாம் செல்லவேண்டும் என்பது உண்மையே!

● எமது தேசிய விடுதலைப்போராட்டம் புதிய கலை, இலக்கிய வெளிப்பாடுகளைத்தரும் எனப்பெரிதும் பேசப்படுகிறது. இதில் ஓவியத்தின் பெறுமானம் எவ்வாறிருக்கின்றது?


□ இங்கு நாடகம், கவிதை போன்ற கலை, இலக்கியப்படைப்புகளின் வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது ஓவியத்துறையின் வளர்ச்சி பின்தங்கியதாகவே காணப்படுகிறது. ஆனாலும் போராட்டம் முனைப்படைந்த காலத்துடன் ஓவியத்துறையும் மெல்ல விழிப்புற்று செயற்பட ஆரம்பித்தது. போராட்ட காலத்தில் ஓவியத்துக்கான தேவையும் பங்களிப்பும் அதிகமாகவே வேண்டப்படும் ஒன்றாகவுள்ளது. ஆச்சரியமானதும், உன்னதமானதும், அபூர்வமானதுமான எமது போராட்ட காலத்தில் படைக்கப்படும் ஓவியங்கள் ஒரு புதிய வரவாகவே இருக்கும். இங்கு போராளிக்கலைஞர்களின்



படைப்புகள் வித்தியாசமாக வரக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன. காலத்தைப் பதிவுசெய்தல், மக்களை விழிப்புணர்வுடன் போராட்டத்தின் பால் பிரக்ஞையுறச் செய்தல், எங்கள் போராட்ட வாழ்வை வெளியுலகுக்கு தெரியப்படுத்துதல் போன்றவற்றில் ஓவியத்தின் செயற்பாடு இருக்கிறது.

● நவீன அரங்கில் ஓவியம் சார்ந்த காட்சிகளும், செயற்பாடும் ஒரு அங்கமாக உணரப்படுகிறதே! இதில் ஓவியனின் கவனமும், செய்கையும் எத்தகையதாகிறது?

☐ பார்வைப் பரப்பில் சூழலையும், பாத்திரங்களின் குண இயல்புக்குரிய தோற்றங்களையும் வழங்குவதில் ஓவியன் செயற்படுகிறான்.




● ஓவியத்துறையில் படித்துப் பட்டம் பெற்றவர்களாக பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களெல்லாம் வெளியே தங்களை இந்தத்துறையில் இனங்காட்டுவதில்லையே, இது ஏன்?

☐ பட்டங்களை வைத்துக்கொண்டு ஒருவரது படைப்பாற்றலை எதிர்பார்க்க முடியாது. இது இன்றைய கல்விச்சூழலில் புரியப்படாத ஒன்றாகவே இருக்கிறது.

● உங்கள் வர்ண ஓவியங்களில் ஏன் செந்நிறம் சார்ந்த வர்ணங்களையே அதிகமாகப் பயன்படுத்துகிறீர்கள்?

☐ வர்ண ஓவியங்களைக் குறைவாகவே தீட்டியுள்ளேன். இங்கு வர்ணத்தெரிவு எனும்போது ஓவியத்தின் கருப்பொருளுக்கு ஏற்பவே நிச்சயிக்கப்படுகிறது. நமது சமகால நிகழ்வுகளைப் படைப்பாக்கம் செய்யும்போது செந்நிறத்தை தவிர்க்கமுடியாது. இதனாலேயே செந்நிறத்தின் தாக்கம் அதிகமாக எனது ஓவியங்களில் காணப்படுகிறது.

● ஓவிய ரசனை என்பது மிகவும் குறைந்த அளவில்தான் காணப்படுகிறது. இது ஆழமான சோகமல்லவா?

☐ ஓவிய ரசனை மனப்பாங்கு குறைவாக இருப்பதால்தான் இங்கு ஓவிய வளர்ச்சியும் பின்தங்கியதாக உள்ளது. ரசனை தொடர்பான குறைபாட்டை புத்திஜீவிகள் மட்டத்திலேயே சுட்டிக்காட்ட முடியும். ஆனால் அண்மைக்காலங்களில் ஓரளவு நல்ல மாற்றம் நிகழ ஆரம்பித்துள்ளது.

தொடரான கண்காட்சிகள், ஓவியம் பற்றிய விமர்சனங்கள், பத்திரிகைகளில் ஓவியம் சம்பந்தமான கட்டுரைகள், ஓவியங்கள் போன்றனவற்றை இடம்பெறச் செய்தல், ஓவியக் கல்வியில் பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்துதல் என்றவற்றினூடாக ரசனையை வளர்க்க முடியும்.

● ஓவியத்துறையில் ஈழத்து விமர்சனம் எந்த நிலையில் இருக்கிறது?

☐ ஒரு துறையின் வளர்ச்சியுடன் விமர்சன வளர்ச்சியும் சமாந்தரமாகவே எப்போதும் இருக்கவேண்டும். இங்கு ஓவியத்துறையில் குறிப்பிடும்படியாக எந்த விமர்சன முறைகளும் வளரவேயில்லை எனலாம். ஓவியவிமர்சனம் என்பது பெரிய இடைவெளியாகவே இருக்கிறது.

● கார்ட்டூனிஸ்ட், ஓவியர் இரண்டுமாக எப்படி இயங்க முடிகின்றது?

☐ ஒரு கார்ட்டூனிஸ்ட் எப்போதும் ஓவியராகவே இருப்பார்.

● இன்றைய சமுக, பொருளாதார அரசியல் சூழலில் கார்ட்டூன் பெறும் முக்கியத்துவம் என்ன?

☐ இன்றைய எமது தேசவிடுதலைப் போராட்ட காலத்தில் பேரினவாத அரசு சகலவழிகளிலும் எம்மீது தாக்கத்தை ஏற்படுத்தி அழிக்க முற்படுகிறது. இங்கு கார்ட்டூன்கள் அரசின் சகலவகையான முகமுடிகளையும் கிழித்து உண்மையான அதன் கோரமுகத்தை சாதாரண பொதுமகனுக்கும் உலகிற்கும் காட்டும் இந்தச்சந்தர்ப்பத்திலேயே கார்ட்டூன்கள் முக்கியத்துவம் பெறுகிறது.

● ஒரு கார்ட்டூனிஸ்டின் கவனம் எவையெவற்றில் இருக்க 'வேண்டும்?

☐ அநீதிகளுக்கு எதிராக குரல்கொடுக்கும் சமுகத்தின் குரலாகவும், சூழலை அவதானிப்பதாகவும், பார்ப்பவரை ஈர்க்கக்கூடியதாகவும், விமர்சனத்தை நகைச்சுவைத் தளத்தில் வெளியிடுவதாகவும் இருக்கவேண்டும்.

● இன்று பரவலாக அறியப்பட்ட ஓவியராக நீங்களும் ஆழமான கவனிப்புக்குரியனவாக உங்கள் ஓவியங்களும் காணப்படுகிற நிலையில், உங்களின் வாழ்க்கைப் பின்னணி பற்றியும் இத்துறை ஈடுபாடு குறித்தும் சொல்லுங்கள்:

☐ 1968-ல் நல்லூரில் பிறந்தேன். ஆரம்பக்கல்வியை நல்லூர்/சி. சி. த. க. பாடசாலையிலும் பின்னர் க. பொ. த. உயர்தரம் வரையில் யாழ்/மத்திய கல்லூரியிலும் பயின்றேன்.

ஆண்டு ஒன்பது வரையுமே சித்திரக்கல்வியை ஒரு பாடமாக எடுத்திருந்தேன். பின் வேறுதுறைகளில் கல்வி திசைதிரும்பியது. இங்கு ஓவியத்துறையில் மேற்படிப்பு வசதிகள் இல்லாமை என்பது என்போன்ற பலரை பாதிக்கும் வேதனையான விடயமாகவே நீள்கிறது.

சிறுவயதில் ஓவியத்துறை ஈடுபாட்டுக்கு ஆரம்பவழிகாட்டியாக எனது தந்தையார் உதவினார். இவ்விடத்தில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களையும் மனங்கொள்ள வேண்டும்.

பின்னாளில் எமது தேசிய விடுதலை

இயக்கத்தையும் சில இலக்கிய நண்பர்களையும் மறக்கமுடியாது.

பாடசாலைக் காலங்களில் ஏதாவது வரைய வேண்டுமென்ற உந்துதல் வரும்போதெல்லாம் எனக்குத் தெரிந்தமாதிரியெல்லாம் வரைந்திருக்கிறேன். இப்பொழுது அவற்றைப் பார்க்கும்போது எனது வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றத்தை அவதானிக்க முடிவதுடன் சிலவேளை சிரிப்பும் வருகிறது.

இந்திய இராணுவம் இங்கு நிலைகொண்டிருந்த இருண்ட அந்தக் காலப்பகுதியில் வெளியில் வெளிக்கிட முடியாது. வீட்டினுள் முடங்கியிருந்தபோது கூடுதலாக நான் வரைய ஆரம்பித்தேன். ஆனால் சரியான வழிகாட்டல்கள் இருக்கவில்லை.

பின், இந்திய இராணுவ வெளியேற்றத்துடன் ஈழநாதம் பத்திரிகை மூலம் கார்ட்டூனிஸ்டாக வெளித்தெரியவந்தேன். மறுபக்கம் போராட்டம் சார்ந்த வெளியீடுகள் மூலமும். ஏனைய வெளியீடுகள் மூலமும் எனது ஓவியங்கள் வெளித்தெரியத் தொடங்கின. இங்கு எனது கார்ட்டூன்களை பிரசுரிப்பதற்கான களங்களை ஏற்படுத்தித்தந்த ஈழநாதம் நிறுவனம், நான் வரைந்த ஆரம்பகால கார்ட்டூன்கள் சிலவற்றை **காலமும் கோலமும்** என்ற தொகுப்பாக்கி வெளியிட்டது. இந்த ஆரோக்கியமான ஆதரவு மேலும் இத்துறையில் நம்பிக்கைவைக்க உதவியாக இருந்தது. இங்கு ஒன்றை நிச்சயமாகக் குறிப்பிடவேண்டும்.

எனது வரைவுகளை அடையாளம் காணுவதற்கு ஈழநாதம், மற்றும் **விடுதலைப்புலிகள், வெளிச்சம் சுதந்திரப்பறவைகள், சாளரம், ஆதாரம்** போன்ற பத்திரிகை சஞ்சிகைகளும் வேறு சில வெளியீடுகளும் களம் அமைத்துத் தந்திருந்தன.

இவற்றைவிட சில வர்ண ஓவியங்களையும் எனது சேமிப்பாக



செய்துள்ளேன்.
சுயமுயற்சியாலும் தேடலினாலுமே நான் இன்றைய நிலையை அடைந்திருக்கிறேன் என்றாலும்... என்னைப் பொறுத்தவரையில் நிறைய முயற்சிகள் செய்யவேண்டியுள்ளது; கற்க வேண்டியுள்ளது.

இது இன்னும் ஆழமான பரந்த ஒரு தளத்திற்கு என்னை அழைத்துச் செல்லும் என நம்புகின்றேன். □

# அபத்தமும் அர்த்தமும்

## 5

உண்மையைத் தேடும் தத்துவார்த்த விசாரணைகள் அனைத்தும் மனிதனிடமிருந்தே தொடங்கவேண்டும் என்பது சாத்தரின் நிலைப்பாடு. ஏனெனில் மனிதனே வாழ்விபக்கத்தின் மையமாக நிற்கிறான். அவனே இருப்பின் மெய்ப்பொருளாகவும் இருக்கிறான். அவனிடமிருந்தே வாழ்வின் அர்த்தங்கள் அவிழ்கின்றன. அவனே அறிவியக்கத்திற்கும் ஆதாரமாக நிற்கிறான். அவனே தன்னையும் படைத்து, வரலாற்றையும் படைக்கிறான். அவனே தன்னையும் தேடி, சத்தியத்தையும் தேடுகிறான். இந்த அபூர்வமான மனிதனை, அவனது முழுமையில் தரிசித்துக் கொள்வது சாத்தியமா? அகநிலையிலும் புறநிலையிலும் உருவாக்கம் பெறும் மனிதனை, முழு மனிதனாகக் கண்டுகொள்வது எப்படி?

**பிரம்மஞானி**

சாத்தரை உறுத்திவந்த கேள்வி இது. பிரஞ்சு இருப்பியத்தின் பிரதம குருவாகவும், நவ மார்க்சியத்தின் தத்துவ வித்தகராகவும், ஒரே சமயத்தில் இரு வேறுபட்ட கருத்து நிலைகளில் காலூன்றி நின்றபடி, மனிதனை அவனது ஆழத்தில் தரிசிக்க விழைந்தார் சாத்தர்.

இருப்பியம் மனிதனை ஒரு பரிமாணத்தில் விசாரணை செய்கிறது. இந்தத் தத்துவம் மனிதனைத் தனிமனிதனாகக் காண்கிறது. தனிமனிதனின் வாழ்நிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. தனிமனிதனின் அகவய வாழ்வை, அவனது அனுபவ உலகத்தை ஆழமாகப் பார்க்கிறது. எனவே, இருப்பியம் காணும் மனிதன் அகமனிதன். இந்த அகமனிதன் முக்கியமானவன். ஆனால் அவன் முழுமனிதனல்ல.

மனித வாழ்வின் சமூகப் பரிமாணத்தை இருப்பியம் செம்மையாகப் பார்க்கவில்லை. சமூக உலகத்தில், அதன் அசைவியக்கத்தில், மனிதனை நிலைநிறுத்திப் பார்க்கவில்லை. இதனால் சமூகத்தைப் படைக்கும் வரலாற்று மனிதனை இருப்பியம் கண்டுகொள்ளவில்லை. இதுதான் இருப்பிய தத்துவத்தின் பிரதான குறைபாடு. இந்தக் குறைபாட்டை மார்க்சியம் நிவர்த்திசெய்துவிடுகிறது. இந்த வகையில், மார்க்சியம் ஒரு புதுமையான சமூக - வரலாற்றியல் நோக்கு என்பது சாத்தரின் கருத்து.

மார்க்சியம் சமூக உலகத்தின் நிதர்சனத்தை வலியுறுத்துகிறது. சமூக வாழ்விற்கும், சமூக உறவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது. மனிதனை தனிமனிதனாகக் காணாமல், சமூக உறவுகளைச் சுமந்துநிற்கும் சமூகப் பிறவியாகக் காண்கிறது. எனவே, மார்க்சியம் காணும் மனி

தன் சமூக மனிதன். மனிதனை சமூக மனிதனாகக் கண்டு, அவனை சமூக உற்பத்தி உறவுகளில் நிலைநிறுத்தி, அந்த உறவுகளை வர்க்க உறவுகளாகப் பார்த்து, அந்த வர்க்க உறவுகளால் எழும் முரணியப் போராட்டத்தை வரலாற்றின் அசைவியக்கமாக விளக்கி, மனிதனை வரலாற்றுப் படைப்பாளியாக சித்திரிக்கிறது மார்க்சியம். இந்த வகையில் கார்ள் மார்க்சின் வரலாற்றுப் பொருளியம் ஒரு உன்னதமான தத்துவம் என்பதை சாத்தர் ஏற்றுக்கொள்கிறார். எனினும், மார்க்சியம் புலப்படுத்திக்காட்டும் சமூக மனிதனும் முழு மனிதன் அல்ல என்பது சாத்தரின் வாதம்.

மார்க்சிய மனிதனுக்கு சமூக முகம் இருக்கிறது; வரலாற்று முகம் இருக்கிறது; ஆனால் மனித முகம் இருக்கவில்லை என்பது சாத்தரின் கருத்து. சாத்தரின் பார்வையில் இந்த மனித முகம் என்பது மனிதத்தைக் குறிக்கிறது. மனிதா சாரத்தைக் குறிக்கிறது. இந்த மனிதா சாரம் என்பது மானிடத்தின் பொதுவுடமையல்ல. அது தனிமனிதர்களின் தனியுடமை. ஒவ்வொரு தனிமனிதனும் தனது வாழ்வனுபவத்திலிருந்து சுயமாகத் தேடிக்கொள்ளும் தனியியல்பு. அகவயமான அனுபவத்திலிருந்து பெறப்படும் இந்தத் தனிமனிதத்துவத்தை மார்க்சியம் மறுதலிக்கிறது என்பது சாத்தரின் நிலைப்பாடு. மனிதனானவன் தனது தேர்வுகள், தீர்மானங்கள், செயற்பாடுகளிலிருந்து, ஒட்டுமொத்தத்தில் தனது உலகானுபவத்திலிருந்து உருவாக்கிக் கொள்ளும் தனிமனிதத்துவத்தை நிராகரிப்பதால், மார்க்சியம் முழு மனிதனைத் தரிசித்து நிற்கவில்லை என்பது அவரது வாதம்.

பொருளுற்பத்தியை ஆதாரமாகக் கொண்ட பொருளிய வாழ்விற்கு மார்க்சியம் முதன்மைகொடுக்கிறது. பொருளியல் புறநிலைகளின் நிர்ணயத் தன்மையை வலியுறுத்துகிறது. பொருளிய வாழ்வும் வரலாற்றுச் சூழலும் சமூகத்தின் கருத்துலகை நிச்சயித்து விடுவதாகக் கூறுகிறது. மனித மனமானது வாழ்க்கையை நிர்ணயிப்பதல்ல; பொருளிய வாழ்வே மனித மனதை நிர்ணயித்துவிடுகிறது, என்ற கருத்தை முன்வைக்கிறது. இந்தப் பார்வையின் அடிப்படையில், அகநிலையை நிர்ணயிப்பது புறநிலைகள்; மனவுலகத்தை நிர்ணயிப்பது பொருளுலகம்; தனிமனிதத்தை நிர்ணயிப்பது சமூகம்; இவ்விதம் காலம், இடம், சமூக சூழல் என்ற ரீதியில் புறவுலக நிர்ணய சக்திகளின் ஆதிக்க அழுத்தத்திற்கு உட்பட்டதாக மனித மனம் வரையறுக்கப்படுகிறது.

மார்க்சியத்தின் இந்தப் பார்வையை 'பொருளிய நிர்ணயத் தத்துவம்' எனவிமர்சிக்கிறார் சாத்தர். இது முற்று முழுதாக மனித மனதையும், மனிதனின் அகவாழ்வையும் புறநிலை நிர்ப்பந்தங்களுக்குள் சிறைபடுத்திவிடுகிறது; மனித பிரக்ஞையின் சுயாதீனத்தையும் சிருஷ்டித்தன்மையையும் இது மறுதலிக்கிறது, என்பது சாத்தரின் குற்றச்சாட்டு.

காலம், இடம், சூழல் என்ற ரீதியில் புறநிலைகள் மனிதனின் அகநிலையில் பாதிப்புகளை விழுத்துகின்றன என்பதை சாத்தர் மறுக்கவில்லை. சமூகப் பொருளிய வாழ்வும், சமூக உறவுகளும் மனிதனின் சிந்தனையுலகை நிச்சயித்து, நெறிப்படுத்தி விடுகிறது என்பதையும் அவர் மறுக்கவில்லை. ஆயினும், மனவுலக வாழ்வை, தனிமனித இயல்பை முற்றுமுழுதாக புறவுலக நிர்ப்பந்தங்களுக்கு ஆட்படுத்த முனைவது தவறு என்கிறார் சாத்தர். மனித மனமானது புறவுலக நிர்ப்பந்தங்களுக்கு அப்பால், நிர்ணய அழுத்தங்களுக்கு அப்பால், விஞ்சி எழும் விழிப்புத்தன்மை கொண்டது; சிருஷ்டித்தன்மை கொண்டது; சுயாதீனமுடையது, என்பது சாத்தரின் வாதம்.

மனித மன இயக்கத்தை முற்றுமுழுதாகப் பொருளுலக நிர்ப்பந்தங்களுக்குள் முடக்கிவிட முடியாது. மனவுலகத்தை பொருளுலகம் முற்றுமுழுதாக நிர்ணயிப்பதாயின் இந்த உலகத்தில் புரட்சிகரமான மாற்றம் எதுவும் நிகழ்வது சாத்தியமில்லை என்கிறார் சாத்தர். ஆனால் உலகம் சதா மாறிக்கொண்டே இருக்கிறது. ஒரு வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக்கொண்டிருக்கிறது. இந்த மாற்றமும் முன்னேற்றமும் நிகழ்வது எப்படி? சிந்தனை வளர்ச்சியும் சிருஷ்டி ஆற்றலும் இல்லாமல் மனித நாகரீகங்கள் தோன்றுவது எப்படி? சமூகங்கள் மாறுவது எப்படி? மனித சிந்தனைக்கு சிறகுகள் இருக்கின்றன. அதனை பொருளுலகச் சிறைக்குள் பூட்டிவைக்க முடியாது. பொருளுலக நிர்ப்பந்த விலங்குகளை உடைத்துக்கொண்டு வெளியில் வரும் ஆற்றல் மனித பிரக்ஞைக்கு இருக்கிறது என்கிறார் சாத்தர்.

மனித மனமானது ஆழமான விழிப்புணர்வைப் பெறும் அபாரமான தன்மையைக் கொண்டது. விழிப்புணர்வு கொள்ளும் மனதில் வெளிச்சம் பிறக்கிறது. அந்த வெளிச்சத்தால் புறவுலக நிர்ப்பந்தங்கள் பிரக்ஞைக்குப் புலனாகிறது. இந்தப் புரிந்துணர்வால் நிர்ணயத்தின் பிடியிலிருந்து மனமானது விடுதலை பெற்றுக்கொள்கிறது. இவ்விதம் விடுதலைபெறும் மனம் தான் புரட்சிகர மனம். இந்தப் புரட்சிகரப் பிரக்ஞைதான் புரட்சிகாமாகச் சிந்திக்கும்; செயற்படும்; புரட்சியையும் செய்யும். எனவே, ஒருபுறம் பொருளிய நிர்ணயக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு, மறுபுறம் புரட்சிகரச் செயற்பாட்டை வலியுறுத்துவது தவறு என்கிறார் சாத்தர். இது வைதீக மார்க்சியத்திலுள்ள முக்கிய முரண்பாடு என்பதையும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

பொருளிய நிர்ணயக் கோட்பாடு, மார்க்சிய இயங்கியல் தத்துவத்திற்கும் முரணானது என்பதும் சாத்தரின் வாதம். நிர்ணயம் என்பது வரையறையைக் குறிக்கிறது. தேக்கத்தைக் குறிக்கிறது. மாறா நிலையைக் குறிக்கிறது. ஒன்று இன்னொன்றின்மீது விழுத்தும் தாக்கத்தையும் மேலாதிக்கத்தையும் குறிக்கிறது. ஆனால் இயங்கியற் பார்வை இதற்கு மாறானது. இயங்கியலானது இயக்கத்தைக் குறிக்கிறது. மாற்றத்தைக் குறிக்கிறது, புத்தாக்கத்தைக் குறிக்கிறது. உயர்நிலை வளர்ச்சிப் போக்கைக் குறிக்கிறது. இயங்கியல் தத்துவமானது எல்லாப் பொருட்களிலும், எல்லா உறவுகளிலும் முரணியத்தைக் காண்கிறது. எதிர்வு சக்திகளின் போராட்டமாக மாற்றத்தை விளக்குகிறது. இயங்கியல் கண்ணோட்டத்தில் மனவுலக இயக்கத்தை பொருளுலக நிர்ப்பந்தங்களுக்குள் வரையறுக்க முடியாது. மனவுலக இயக்கமானது, புறநிலை அழுத்தங்களையும் மீறியதாக, தனக்கே உரித்தான முரணியச் சுழற்சியில் உயர்நிலை வளர்ச்சி காண்கிறது. எனவே, பொருளிய புறநிலைகளின் தோற்றப்பாடாக, பிரதிபலிப்பாக, பிரதிபிம்பமாக, மனவுலகையோ கருத்துலகையோ சித்திரிக்க முடியாது என்கிறார் சாத்தர். இதன் அடிப்படையில், பொருளாதார அடித்தளத்தின் மேற்தளமாக கருத்துலகிற்கு விளக்கம் அளிக்க முயல்வதும் தவறு என்கிறார் அவர்.

புறநிலைகளுக்கு, அதாவது சமூக நிலைகளுக்கு முதன்மைகொடுக்கும் மார்க்சியத் தத்துவம், அகநிலைகளுக்கு அதாவது மனித மனம், மனித சுயம், மனித படைப்பாற்றல் என்ற ரீதியில் தனிமனித தத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பது சாத்தரின் குற்றச்சாட்டு. இதனால் தனிமனிதத் தடயமற்ற சமூக உலகத்தை மார்க்சியம் கட்டியெழுப்பியிருக்கிறது. இந்த சமூக உலகத்தில் தனி மனிதனை இனம் காணமுடியாது. சமூக உறவுகள் என்ற சிலந்திவலைப் பின்னலுக்குள் அவனது அடையாளம் அழிக்கப்படுகி

றது. சமூக உறவுகளின் தன்மைகளைப் பிரதிபலிக்கும், சமூக உறவுகளின் சுமைக ளைத் தாங்கிநிற்கும், சாரமற்ற, உயிரற்ற சமூக மனிதனை மட்டும் மார்க்சியம் காட் டுகிறது. இந்த மனிதன் முழுமனிதனல்ல என்பது சாத்தரின் நிலைப்பாடு.

அகவாழ்வும் புறவாழ்வும் புணர்ந்து பிரசவிப்பதுதான் முழுமனிதத்துவம். இருப்பியம் மனிதனின் அகவாழ்வையும், மார்க்சியம் மனிதனின் புறவாழ்வையும் ஆழமாகத் தரிசித்து நிற்கும் தத்துவங்கள். எனவே, இருப்பியமும் மார்க்சியமும் இணைந்துகொண்டால் முழுமனிதனைக் கண்டுகொள்வது சாத்தியமென சாத்தர் எண்ணினார். 1960 ல் அவர் எழுதிய *CRITIQUE OF DIALECTICAL REASON* என்ற தத்துவார்த்த நூல் மார்க்சியத்தை யும் இருப்பியத்தையும் இணைக்க முனை கிறது.

'மார்க்சின் வரலாற்றுப் பொருளியமா னது மனித வரலாற்றிற்கு அறிவியல்ரீதி யாக, ஆதாரபூர்வமான விளக்கத்தைக் கொடுக்கிறது. அதேசமயம் இருப்பியம் தனிமனித வாழ்வின் நிதர்சனத்தை வலி யுறுத்துகிறது. இந்த இரு பார்வைகளை யும் கோட்பாடு ரீதியாக ஒன்றிணைப்ப தன் மூலம் சமூக வரலாற்று இயக்கத்தில் தனிமனிதனின் இருப்பை நிறுவிவிடுவதே இந்த ஆய்வு நூலின் நோக்கம்' என்கிறார் சாத்தர்.

சமூக, வரலாற்றுப் பரிமாணங்களில் தனிமனிதனை ஆய்வு செய்து, 'மார்க்சிய அறிவுயலுக்குமனிதனைஅறிமுகப்படுத்தும்' சாத்தரின் நோக்கம் பெரிது. முகவுரையில் சொல்லப்படும் இந்த நோக்கினை நூலின் உள்ளடக்கம் நிறைவு செய்யத் தவறிவிட் டது என்றே சொல்லவேண்டும்.

கார்ள் மார்க்சின் வரலாற்றுப் பொரு ளியத்தை மனித வரலாற்றின் உண்மை விளக்கமாக ஏற்று, அந்தச் 'சிந்தனையின் அடிப்படையில் நின்று, தனது தத்துவத் தைப் படைத்திருப்பதாக சாத்தர் சொல் கிறார். மார்க்சிய சமூகவியலின் சிந்தனைப் பரப்பிற்குள் (கோட்பாட்டுக் கட்டமைப் பிற்குள்) மனித இயல்பினை விளக்கும் இருப்பியக் கருத்துக்களைப் புகுத்தி, தனி மனிதனுக்கும் சமூக உலகத்திற்கும் மத்தி யிலான சிக்கலான உறவுகளை தாம் எடுத்துவிளக்கியிருப்பதாக அவர் கூறுகி றார். அதுமட்டுமன்றி, மார்க்சிய சிந்த னையுலகில் தனிமனிதனுக்கு இடமளித்து மார்க்சியத்தைப் புதுப்பித்திருப்பதாகவும் சாத்தர் பெருமிதம் கொள்கிறார். முகவுரை யில் தரப்படும் இந்த விளக்கங்களை வாசித்துவிட்டு, சாத்தரின் நூலைப் படிப் பவர்களுக்கு ஏமாற்றமே காத்திருக்கிறது.

மிகவும் கனமான, சிக்கலான, தெளி வற்ற மொழிநடையில் எழுதப்பட்டிருக் கும் இந்த நூல், மார்க்சிய வரலாற்றிய லை எந்தவகையிலும் செழுமைப்படுத்த வில்லை. மாறாக, மார்க்சிய மையக் கருத் துகளையே திரிபுபடுத்தியிருக்கிறது. மார்க் சிய வரலாற்றியலுடன் இருப்பியத்தை இணைப்பதற்குப் பதிலாக, சாத்தர், தனக்கே உரித்தான பாணியில் ஒரு புதிய பூடகமான தத்துவத்தைப் படைத்திருக்கி றார் என்று சொன்னால் மிகையாகாது.

இந்தத் தத்துவ நூலில் சாத்தர் முன் வைக்கும் கருத்துகள் பற்றியும், இந்தக் கருத்துகள் எந்தவகையில் மார்க்சிய வர லாற்றுப் பொருளியத்திற்கு முரண்பட்டு நிற்கின்றன என்பது பற்றியும் இனிப் பார்ப்போம்.

'இயங்கியல் அறிவியம்பற்றிய திற னாய்வு' என்ற தலைப்பில் இந்நூல் எழுதப் பட்டிருக்கிறது. கார்ள்மார்க்சின் வழிதழுவி மனித உலகத்து மெய்யுண்மைகளை விளக்க இயங்கியல் ஆய்வுமுறையை தான்கையாண் டிருப்பதாக சாத்தர் சொல்கிறார். ஆயினும் மார்க்சின் இயங்கியற் பார்வைக்கும் சாத் தரின் இயங்கியல் நோக்கிற்கும் அடிப்ப

டையான வேறுபாடு உண்டு. கார்ள் மார்க்ஸ், இயங்கியலை இரு பரிமாணங்களில் அணுகினார். ஒன்று, பொருளுலகினதும் சமூக வாழ்வினதும் மூல இயக்கமாக இயங்கியலைக் கண்டார். மற்றது, இயங்கியலை ஒரு சமூக ஆய்வுக் கருவியாகக் கையாண்டார். (வெளிச்சத்தில், 'மனிதனும் வரலாறும்' என்ற தலைப்பில், பிரம்மஞானி எழுதிய தொடர்கட்டுரைகளில் மார்க்சிய இயங்கியல்பற்றி விபரமான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன) சாத்தரின் இயங்கியற் பார்வை வித்தியாசமானது.

சாத்தர் கற்பிக்கும் இயங்கியல், பொருளுலகத்திலோ சமூக வாழ்விலோ இயங்கவில்லை. அது மனித செயற்பாட்டு உலகத்தில்மட்டும் சஞ்சரிக்கிறது. இயங்கியல் என்பது மனித செயற்பாட்டிலிருந்து பிறக்கிறது; மனித செயற்பாடாக இயங்குகிறது என்கிறார் சாத்தர். மனித செயற்பாட்டிற்கு அறிவுபூர்வமான நோக்கம் இருக்கிறது; ஒரு தர்க்கீகம் இருக்கிறது இந்த அறிவியத் தர்க்கீகமே இயங்கியல் இப்படியான ஒரு புதிரான விளக்கத்தைக் கொடுக்கிறார் சாத்தர் இந்தப் பூடகமான தர்க்கிக ஆய்வுமுறைமையின் அடிப்படையில் மனித உலகத்தை விசாரணை செய்கிறார் சாத்தர்.

சாத்தரின் தத்துவ விசாரணை தனிமனிதனிலிருந்து தனிமனிதனின் செயற்பாட்டிலிருந்து தொடங்குகிறது.

தனிமனிதன் தனிமையில்வாழவில்லை. அவன் சமூக உலகத்தில் வாழ்கிறான். சமூக உலகமானது தனிமனிதனுக்குப் புறம்பான, தனித்துவமான மெய்யுண்மையாக இயங்கவில்லை, தனிமனிதர்கள் என்ற அத்திவாரக் கற்களிலிருந்தே சமூக உலகம் கட்டப்பட்டிருக்கிறது. தனிமனிதர்களைக் கொண்டதாகவே சமூகம் அமையப்பெற்றிருக்கிறது. தனிமனிதர்கள் இல்லாமல் சமூகம் என்பது இருக்கமுடியாது என்கிறார் சாத்தர்.

சமூக உலகத்தை ஒரு தன்னியக்க சக்தியாக, தனித்துவ விதிகளைக்கொண்டதாக, தனிமனிதர்களுக்கும் புறம்பானதாக, தனிமனிதர்களை வளைந்துவிடும் ஒரு பூதாகர இயந்திரமாக சித்தரித்துக் காட்டுவது தவறு. தனிமனிதர்கள்தான் சமூகத்தின் மூலப்பொருள். அந்த மையப் புள்ளியிலிருந்தே சமூக உலகத்தை விசாரணைசெய்யவேண்டும் என்பது சாத்தரின் வாதம். தனிமனிதனிலிருந்து சமூக உலகத்தைக் கண்டுகொள்வது எப்படி? இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில், மனித செயற்பாடு (*HUMAN PRAXIS*) என்ற கருத்துருவத்தை அறிமுகப்படுத்துகிறார் சாத்தர்.

மனித செயற்பாடுதான் தனிமனிதனையும் சமூக உலகத்தையும் பிணைக்கிறது. வாழ்க்கையின் தேவைகளை நிறைவு செய்துகொள்ள மனிதர்கள் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள். ஒவ்வொருவனும் ஏதோ முயற்சியில் ஈடுபடுகிறான்; செயற்படுகிறான்; உழைக்கிறான். இந்தச் செயற்பாடு ஆக்கமானது. படைப்பாற்றல் கொண்டது எதிர்காலத்து நிறைவையும், முழுமையையும் தேடுவது. ஒவ்வொருவனது செயற்பாடும் மற்றவனுடன் தொடர்புடையதாக இருக்கிறது. தனிமனிதர்களது ஒட்டுமொத்தமான செயற்பாடுகளின் முழுவடிவமாகவே சமூக உலகம் உருவாக்கம்பெறுகிறது என்கிறார் சாத்தர். தனிமனிதச் செயற்பாட்டில் நோக்கமும், ஆக்கமும், அர்த்தமும் இருக்கிறது. அதனால் தனிமனிதச் செயற்பாட்டில் இயங்கியல் மையம்கொள்கிறது. அது வளர்ச்சிப்போக்குடைய இயக்கம் என்பதால் அது புறநிலையை மாற்றும் தன்மையைக் கொண்டது. தனிமனிதர்களின் செயற்பாடுகள் ஒட்டுமொத்தமான முழுமைகாணும்பொழுது, இயங்கியலும் சமூக அசைவியக்கமாக செயற்பட்டு சமூக வரலாற்றை நகர்த்திச்செல்கிறது என்ற பூடகமான கருத்தையும் முன்வைக்கிறார் சாத்தர்.

தனிமனிதனை மையமாகக் கொண்ட சாத்தரின் சமூகப் பார்வையையும் அவரது விசித்திரமான இயங்கியலையும் விமர்சிப்பதற்கு முன்னராக, இந்தத் தத்துவார்த்த நூலில் சாத்தர் முன்வைக்கும் மற்றைய கருத்துக்களைப் பார்ப்போம்.

(தொடரும்)

இரவு முழுவதும் மழை
சோணாவாரியான சொரிவு.
போர்வைக் கணப்பில் தூக்கம்
ஆனந்தமானது இரவு.
விடிந்து வெளியே வந்தபோது
முற்றம்; வெள்ளம் நிரம்பி
விறைத்துக் கிடந்தது.
போர்வையை விலத்தியபோது
ஊசிபோல் குத்தியது குளிர்.
மனைவி மூட்டிய அடுப்பருகே
குந்தியிருப்பதில் சுகம்.
வெளியே இறங்க வெய்யிலுக்குக் காத்திருந்தபோது
'ஷெல்'லொன்றின் கூவல் திடுக்கிட வைத்தது.
எவர் வீட்டுக் கூரையில் இது விழும்?

# இருள் விலகி விடிகிறது இனி நிலம் வெளிக்கும்

புதுவை இரத்தினதுரை



யாரைக் கொல்லும்?
மரங்களின் மேலோ
மாடுகள், ஆடுகள் மேலோ
வெற்றுத் தரையின் மேலோ விழும்?
எங்கோ உயிர்பறிப்பை இதுசெய்யும்.
இந்த அடைமழைக்குள்ளே
அந்த வீடு எத்தனை வதைபடும்.
கூடி அழும்
எவரையாவது இழந்து தனித்துப் போகும்.
அடுத்த குண்டு என்பிள்ளை மீதிலும்
என் வீட்டின் மீதிலும் விழலாம்
ஏன்; நானே அதற்கு இலக்காகலாம்.
இது என்ன அவலம்.
இந்த வாழ்வுக்கு என்ன பெயர்?

நேற்றுப் பாடசாலைக்கு வந்து
''போர்க்கால கருத்தரங்கு'' நடத்திய பெடியன்
'அடிமை வாழ்வு' என்றானே
அது இது தானா?
இரவு முழுதும் நான் தூங்கினேன்
ஒரு மழைத்துளிகூட என்னில் விழவில்லை
இந்த இரவை
அந்தச் சின்னக் குருத்துக்கள்
எப்படிக் கழித்திருக்கும்?
எதிரியின் வரவை எதிர்பார்த்தபடி
மழைக்குள்ளும், குளிருக்குள்ளும்
காவலரணில் விழித்திருப்பார்கள்
எனக்கு முழுதாய் விளங்கவில்லை



ஆயினும்
போராடும் வாழ்வு பெரியது.
அதில் அழகும் 'அர்த்தமும் உண்டு.
அடுத்தவருக்காக சிலுவை சுமப்பதற்கு
எல்லோராலும் இயலாது.
காவலரண்களில் கண் விழித்திருந்த
சின்னப் பூக்களுக்குச் சிரம்சாய்த்து
சைக்கிலேறி வெளியே புறப்பட்டேன்.
நல்ல மீன் வாங்க வேண்டும்.
முடியுமானால் இறைச்சி வாங்குவோம்.
ஓரிரண்டு போராளிகளை வீட்டுக்கழைத்து
இன்று விருந்து கொடுக்க வேண்டும்.
என்னால் முடிந்தது இதுதான்.

# உடையாத விலங்குகள்

அடேல் ஆன்

*('உடையாத விலங்குகள்' (UNBROKEN CHAINS) என்ற தலைப்பில், யாழ்ப்பாணத்தில் நிலவும் சீதன முறைமை பற்றி அடேல் ஆன் ஆங்கிலத்தில் எழுதிய நூல் தமிழாக்கம் செய்யப்பட்டு தொடர் கட்டுரைகளாக 'வெளிச் சத்தில்' பிரசுரமாகி வருகிறது. இந்த நூலின் இரண்டாம் பாகத்தின் மூன்றாம் பகுதியை இங்கு தருகிறோம்)*

## 7

ஒழுங்குத் திருமண முறைமையானது சீதன நடைமுறைக்கு ஏதுவாக அமையப்பெற்றுள்ளது என்பதை விளக்கிக்கூறினோம். சீதன வழக்கானது ஒரு பெண்ணுக்கு ஒரு கணவனைமட்டும் தேடிக் கொடுக்கவில்லை. கணவன் மூலமாக ஒரு சமூகப் பெறுமானத்தையும் பெற்றுக் கொடுக்கிறது. ஏனெனில் ஒரு பெண்ணின் சமூக அந்தஸ்து, அவளது சமூக உயர்வு, பொருளாதாரப் பாதுகாப்பு ஆகியன கணவன் வாயிலாகவே கிடைக்கப்பெறுகிறது. இதுபற்றி இனிப் பார்ப்போம்.

தமிழர் பண்பாட்டு உலகத்தில், ஒரு ஆணின் மையத்திலிருந்தே ஒரு பெண்ணின் வாழ்நிலை நிச்சயமாகிறது. தாம்பத்திய உறவின்றி, தனிமனிதப் பிறவியாக நிற்கும் ஒரு பெண்ணுக்குப் பெரும்பாலும் தனித்துவ அடையாளமோ அந்தஸ்தோ கிடைப்பதில்லை. ஒரு கணவனின் அந்தஸ்தே ஒரு மனைவியின் அந்தஸ்தை நிர்ணயித்துவிடுகிறது. எனவே, திருமண உறவானது ஒரு பெண்ணின் சமூக வாழ்நிலைக்கு முக்கியமானது. ஏனெனில், திருமண உறவு மூலகாகவே அவள் தனது சமூக அடையாளத்தையும் அந்தஸ்தையும் பெற்றுக்கொள்கிறாள். படித்த, உயர்நிலைத் தொழில் புரியும் பெண்களின் வாழ்நிலை இதற்கு உதாரணமாக அமைகிறது.

சாதாரண தர, உயர்தரக் கல்வியிலும் பட்டம்படிக்கும் மேற்படிப்பிலும், யாழ்ப்பாணக் குடாநாட்டில், கணிசமான தொகையில் பெண்கள் கல்வி பயில்கின்றனர். மருத்துவத்துறையில் டாக்டர்களாகவும், சட்டத்


துறையில் வழக்கறிஞர்களாகவும், பல் வைத்தியர்களாகவும், மிருக வைத்தியர்களாகவும், கணக்காளர்களாகவும் துறைசார் தொழில்களில் பெண்கள் கடமையாற்றுகிறார்கள். அத்தோடு கல்லூரி அதிபர்களாகவும், ஆசிரியைகளாகவும் பெண்கள் தொழில்புரிகிறார்கள் கல்வியையும் அறிவையும் பெண்கள் தேடிக்கொள்வதையும், துறைசார் நிபுணர்களாக தொழில் புரிவதையும் நாம் வரவேற்கவேண்டும். பெண்கள் தமது வாழ்வை வலுப்படுத்திக் கொள்ளவும், சமூக ரீதியாக முன்னேற்றம் காணவும் கல்வியும் அறிவும் அவர்களுக்கு அவசியமானது. உயர்நிலைத் தொழில் புரியும் பெண்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு நிலையான வேலைவாய்ப்பும் அதன் மூலம் தனித்துவமான பொருளாதார வாழ்வும் கிட்டுகிறது அத்துடன், இன்றைய உலகில் அவர்களுக்கு சமூக கௌரவமும், செல்வாக்கும், சமூகப் படிநிலையில் உயர்ந்த அந்தஸ்த்தும் உண்டு. அந்தஸ்த்தும், பொருளாதார நலன்களும், கல்வியால் பெறப்படும் முற்போக்கான அம்சங்களும் இப்பெண்களுக்கு கிடைக்கப்பெற்ற போதும், இவை அனைத்தையும் மறுதலிப்பதுபோன்று பிற்போக்கான கலாச்சார அம்சங்கள் அவர்களது வாழ்வை நிர்ணயிக்கும் சக்தியாக அமைந்துவிடுகின்றன. இதனால் கல்வியறிவு மூலமாகவும் தொழில் வாய்ப்பு வாயிலாகவும் அவர்கள் பெற்றுக் கொள்ளும் முற்போக்கான, பெண் விடுதலைக்கான பண்பியல்புகள் முழுமையாக நிறைவுகாணப்படுவதில்லை. அவர்களும் சீதன வழமை என்ற சமூக நடைமுறைக்கு ஆளாகிறார்கள். ஆண்களுடனான அவர்களது உறவுநிலைகளில் பாலியல் வேறுபாடு தலைதூக்கவே செய்கிறது. இதன் அடிப்படையில், உயர்நிலைத் தொழில்புரியும் பெண்களும் பெண் வர்க்கத்துடன் இனம் காணப்படுவதுடன் சீதனம் கொடுத்தே திருமணம் செய்யவேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களது கல்வியும் தொழில்வாய்ப்பும் அவர்களது சீதனத்தின் பெறுமானத்தையும் உயர்த்திவிடுகிறது.

பெண் வர்க்கத்தை சார்ந்தவர்கள் என்ற ரீதியில் உயர்நிலைத் தொழில் புரியும் பெண்களும் ஆணாதிக்கத்திற்கு கீழ்ப்படியும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். சமூகத்தின் பண்பாட்டு ஒழுங்குமுறைக்கு ஊடாகவே அவர்களும் திருமணம் செய்து கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் தமது சமூக அந்தஸ்தை நிறுவிக்கொள்ள, தமக்கு சமமான சமூக அந்தஸ்தையுடைய ஆண்களை திருமணம்செய்ய விரும்புகிறார்கள். தமது சொந்த ஆற்றலில், திறனில், தமது சமூக அந்தஸ்தை நிலைநாட்டிக்கொள்ள அவர்களால் முடியாமல் இருக்கிறது. நீண்டகாலம்படித்து உயர்நிலைத் தொழில்வாய்ப்புப்பெறும் பெண்கள் சமூகத்தின் உயர்மட்டத்தில் திருமணம் செய்துகொள்வதன் மூலம் தமது சமூக அந்தஸ்தை பேணிக் காக்க முனைகின்றனர். இதன் விளைவாக, உயர்ந்த சமூக அந்தஸ்திலிருக்கும் பெண்கள் அதே சமூக நிலையிலுள்ள ஆண்களைத் திருமணம்செய்ய மிகப் பெருமளவு சீதனத்தை வழங்கத் தயாராக இருக்கிறார்கள்

உயர்நிலைத் தொழில்வாய்ப்பும், உயர்ந்த சமூக அந்தஸ்துமுள்ள பெண்கள், தமது சமூக நிலைக்கு ஏற்ற ஆண்களை திருமணம்செய்வதற்காக சீதனமாக வழங்கும் பெரும்தொகை மூலதனம் சமூகத்தையே ஆட்டம்காணச் செய்கிறது. இதில் இரு பிரச்னைகளை நாம் கருத்தில் எடுக்க வேண்டும். முதலாவதாக, தமது சமூக நிலைக்கு ஏற்ப கணவரைத் தேடிக்கொள்வதற்கு பெரும் செல்வத்தைச் சீதனமாகச் செலவழிப்பது பெண்கள்பற்றி எதிர்மறையான கருத்துநிலையை உருவாக்குகிறது. ''பெண்கள் சமூக அந்தஸ்தை தேடிக் கொள்ள விரும்புகிறார்கள்,'' ''சாதாரண ஆண்களை பெண்கள் திருமணம் செய்ய விரும்பவில்லை,'' ''பெண்கள் தமது அபி

லாசைகளை நிறைவேற்ற பணத்தை செலவு செய்கிறார்கள்''— இப்படியான குற்றச்சாட்டுகள் பெண்கள்மீது சுமத்தப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் தவறானவையாகும். ஆண்களைப் போன்று பெண்களுக்கும் சமூக அந்தஸ்தைத் தேடிக்கொள்ளும் உரிமையுண்டு. பெண்களுக்கும் அபிலாசைகள் இருப்பதில் தவறில்லை. சொந்த அபிலாசைகள் அற்றவர்களாக, சமூகம் வரித்துவிட்ட நெறிகளை மௌனமாக ஏற்று, நீண்ட நெடுங்காலமாகவே சமூக அடக்குமுறைக்குள் பெண்கள் வாழ்கிறார்கள். இன்றும் இதே நிலைதான் தொடர்கிறது. ஆனால் ஆற்றலும், அபிலாசையும், செயற்திறனும் மிக்க பெண்களே சமூகத்திற்கு உந்துவிசையாக இருப்பார்கள். தம்மை முன்நகர்த்திச் செல்லும் இவர்களே, சமூக முன்னேற்றத்திற்கு புதிய பாதை அமைத்துக்கொடுப்பார்கள். குடும்ப வாழ்வு எனும் குறுகிய வட்டத்திற்குள் பெண்களின் ஆற்றல்களை முடக்கிவைத்திருப்பதற்குப் பதிலாக, அவர்களது செயற் திறன் சமூக வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பயன்படுத்தப்படவேண்டும். எனினும், மிகக் குறைந்த வீதமான உயர்நிலைத் தொழில் புரியும் பெண்களே சமூகத்தின் வரையறைகளை உடைத்துக்கொண்டு, முற்போக்கான இலட்சியங்களுக்காக உழைத்துவருகிறார்கள். ஆனால் பெரும்பான்மையான படித்த பெண்கள், உயர்நிலைத் தொழில் புரியும் பெண்கள், தமது கல்வியறிவைப் பயன்படுத்தி பெண்களின் விடுதலைக்காக உழைப்பதை விடுத்து, பெண்களையும் தங்களையும் இழிவுபடுத்தும், சீதனம் என்ற ஒடுக்குமுறைக்குள் சிக்கிவிடுகிறார்கள். இனி இரண்டாவது பிரச்னைக்கு வருவோம். அதாவது, உயர்ந்த அந்தஸ்திலுள்ள, உயர்நிலைத் தொழில்புரியும் ஆண்களைத் திருமணம்செய்து கொள்வதற்காக பெருமளவு சீதனத்தை அள்ளிக் கொடுக்கும் வழக்கம் பாதகமான அம்சங்களையும் தோற்றுவிக்கிறது. அதாவது, கணவனைத் தேடும் போட்டியை தீவிரப்படுத்தி அந்தப் போட்டிக்கான பந்தயப் பணத்தையும் உயர்த்திவிட்டு, சீதனத்தில் புதியதொரு நியமத்தை தோற்றுவிப்பதற்கும் பெண்களே காரணமாக இருக்கிறார்கள்.

பெண்களின் சமூக அந்தஸ்து என்ற பிரச்னையுடன் பின்னிப் பிணைந்ததாக, பெண்களின் சமூக மேல்நிலை நகர்வு அமையப்பெற்றிருக்கிறது. படித்த இளம் பெண்கள், தொழில்வாய்ப்பும் வருமானமும் பெறும் பெண்கள், தமது ஆளுமையை வளர்த்து, சொந்தமான பொருளிய வாழ்வை நிறுவி, சமூகப் படிநிலையில் மேல்நோக்கி நகர்வதற்கான வாய்ப்புகள் தமிழ்ச் சமூகத்தில் மிகக் குறைவு. சமூக ஏணியில் மேல்நோக்கிச் செல்வதற்கு திருமணம் ஏதுவாக அமைகிறது. உயர்ந்த சமூக வட்டத்தில் தாம்பத்திய உறவை ஏற்படுத்திக்கொள்வது மேல்நிலை நகர்வுக்கு வழிவகுக்கிறது. உயர்நிலைத் துறைசார் தொழில்புரியும் பெண்களைப்பொறுத்தவரை, கல்வி, தொழில், வருமானம் ஆகி




யன மட்டும் அவர்களது சமூக மேல்நிலை நகர்வுக்கு வாய்ப்பளிக்கவில்லை என்பதை முன்பு விளக்கினோம். ஒரு பெண்ணினது சீதனத்தின் பெறுமானமே அவளது சமூக உயர்நிலை அசைவைத் தீர்மானித்துவிடுகிறது. கல்வியும், தொழில்வாய்ப்பும், வாழ்க்கைத் தரமும் சமூக உயர்வுக்கு ஏதுவாக அமைந்தபோதும் பெண்களின் சமூக உயர்நிலை அசைவியக்கத்தை தீர்மானிக்கும் முக்கிய அம்சமாக விளங்குவது சீதனமாகும். அந்தச் சீதனமும் கணிசமானதாக இருக்கவேண்டும். உதாரணமாக, சமூகத்தின் உயர்மட்டத்திலுள்ள ஒரு ஆண், சீதனம் குறைவாகவுள்ள ஒரு படித்த, தொழில்புரியும் பெண்ணுக்குப் பதிலாக, பெருமளவு சீதனமுள்ள படிக்காத, தொழிலற்ற ஒரு பெண்ணை வாழ்க்கைத் துணைவியாக தெரிவுசெய்துகொள்ளலாம். எனவே, பெண்களின் சமூக மேல்நிலை நகர்வுக்கு பெருமளவு சீதனம் அவசியமாகிவிடுகிறது

சொத்துடமையற்ற பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் பாரிய குடும்பப் பிரச்னைகளை எதிர்கொண்டு நிற்கின்றனர். குடும்பத்தின் பொருளாதார நிலைக்கும் குடும்பத்தின் சமூக அபிலாசைகளுக்கும் மத்தியில் எழும்முரண்பாடுகள் இந்தப் பிரச்சினைகளுக்கு தூபமிடுகின்றன. பெண்பிள்ளைகளுக்கு சீதனம்தேடி வக்கற்றுப் போன குடும்பங்கள், சகோதரிகளின் சீதனத்திற்கு உழைப்பதற்காக வெளிநாடு அனுப்பப்படும் சகோதரர்கள், சகோதரிகளுக்கு வரதட்சனைதேட பணத்திற்காக திருமணம்செய்யும் சகோதரர்கள்- இப்படியான பல பிரச்னைகளை சொத்துடமையற்ற குடும்பங்கள் எதிர்நோக்குகின்றன. தான் விரும்பும் சமூக தரத்தில் வாழ்க்கைத் துணைவனை தெரிவுசெய்யும் சுதந்திரமும் வாய்ப்பும் மறுக்கப்படுவதால், ஒரு பெண், தனது சமூக உயர்வுநோக்கிய அபிலாசைகளை நிறைவுசெய்துகொள்ள சீதன முறைமையே ஒரேயொரு வழியாக அமைந்துவிடுகிறது.

திருமணம் மூலமாக ஒரு பெண் பிள்ளையை சமூக மேல்நிலைக்கு உயர்த்திவிடுவதில் குடும்பத்திற்கும் அனுகூலமான நலன்களுண்டு. முதலாவதாக, இத்தகைய திருமணம் குடும்பத்தின் சமூக அந்தஸ்தை உயர்த்திவிடுகிறது. இரண்டாவதாக, குடும்பத்திலுள்ள மற்றைய பெண் பிள்ளைகளின் சமூக மேல்நிலை நகர்விற்கு வழிவகுப்பதாகவும் அமைந்துவிடுகிறது. எனவே, மூத்த பெண் பிள்ளைக்கு வழங்கப்படும் சீதன மூலதனம், அந்தப் பெண்ணினதும் முழுக் குடும்பத்தினதும் சமூக அந்தஸ்திற்காக செய்யப்படும் முதலீடாகவும் கொள்ளலாம்.

முடிவாகச் சொல்வதானால், பெண்களின் சமூக உறவுகள்மீது திணிக்கப்படும் பண்பாட்டு அழுத்தங்களும், ஆண்கள் வாயிலாக பெண்களின் சமூக அந்தஸ்து நிச்சயிக்கப்படுவதும், சீதன முறைமை என்ற மிகவும் கொடுமையான, பிற்போக்கான சமூக நடைமுறையை பேணவும், வளர்க்கவும் செய்கிறது எனலாம். தமது ஆவல்களையும், சமூக அபிலாசைகளையும் நிறைவு



செய்துகொள்வதற்கு பெருந்தொகையான பெண்களுக்கு சீதனமுறைமையே ஒரேயொரு வழியாக இருந்துவருகிறது.

## பெண்களும், குடும்பமும், சீதனமும்

தமிழரின் சமூகக் கட்டமைப்பில் குடும்பமே (ஒற்றைக் குடும்பமும் கூட்டுக் குடும்பமும்) மையமான சமூக நிறுவனமாக இயங்கி வருகிறது. வீட்டுத் தலைவனான கணவன், அவனுக்குப் பணிவான மனைவி, பிள்ளைகள் என்ற ரீதியில் அமையப்பெறும் குடும்பமே சந்ததிவிருத்திருக்கும், சமூக உறவுகளின் மீளாக்கத்திற்குமான பண்பாட்டுக் களமாக இருந்து வருகிறது.

ஆணுக்கு வேறு, பெண்ணுக்கு வேறான பாலியல் வேறுபாட்டின் அடிப்படையில் வகுக்கப்பட்ட சமூகப் பங்குகளை கொண்டதாக தமிழரின் குடும்பக் கட்டமைப்பு அமையப் பெற்றிருக்கிறது. உயிரியல் வேறுபாட்டின் அடிப்படையிலும் பண்பாட்டு நெறிகளின் அடிப்படையிலும் இந்த வகைப்படுத்தல் நேர்ந்திருக்கிறது. இயற்கையாகவே ஆண்கள் பலமானவர்கள், வலுவானவர்கள் என்ற கருத்து நிலை இருக்கிறது. உடல் வலிமையும், ஆதிக்க சுபாவமும், சுயமுனைப்பும் கொண்ட ஆண்களே குடும்பத்தின் 'பலவீனமான' அங்கத்தவர்களாகக் கருதப்படும் பெண்களையும் பிள்ளைகளையும் பாதுகாக்கும் தகுதியுள்ளவர்கள் என்ற பார்வையும் இருக்கிறது. இந்தக் கண்ணோட்டத்தின்படி குடும்பத்தைப் பேணிப் பாதுகாக்கும் சமூகப் பங்கு ஆண்களுக்கே உரியதாகக் கொள்ளப்படுகிறது. குடும்பத்திலுள்ள ஆண்களின், குறிப்பாக கணவன்மாரின் சமூகப் பங்கு குடும்ப வட்டத்திற்கு வெளியே அமைகிறது. அதாவது, கணவன்மாரும் ஆண் பிள்ளைகளும், சமூக உற்பத்தி உலகில் வருமானம் சம்பாதித்து குடும்பத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்ற எதிர்ப்பார்ப்பு இருக்கிறது. குடும்பத்தின் பொருளிய வாழ்வைப் பேணும் சமூகப் பங்கை வகிப்பதால் பெருமளவு அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும் சமூகம் அவர்களுக்கு வழங்கியிருக்கிறது. இன்னொரு வகையில் சொல்வதாயின், சமூக உற்பத்தியில் ஈடுபட்டு சமூக செல்வத்தைப் படைப்பவர்கள் என்ற ரீதியில், ஆண்களின் செயற்பாடு சமூக ஆக்கமுடையதாகக் கருதப்படுகிறது.

குடும்பத்திலும், அதன் விரிவாக்கமான சமூகத்திலும் பெண்களின் பங்கு என்ன? 'பெண்மை' என்ற சமூகக் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழ் சமூகத்தில், பெண்களின் பங்கு வரையறுக்கப்படுகிறது. இந்தக் கோட்பாடும் உயிரியல் நோக்கை அடிப்படையாகக் கொண்டது. பெண்களின் நிலையானது, 'ஆண்மை' என்ற சமூகக் கோட்பாட்டிற்கு முற்றிலும் மாறானது. ஆண்கள் போன்ற உடல்வலிமை பெண்களுக்கு இல்லையென்பதால் அவர்களது சமூகப் பங்களிப்பு வித்தியாசமானதாகக் கருதப்படுகிறது. 'பெண்மை' என்ற கோட்பாட்டில், இனப்பெருக்கம் செய்யும் பெண்களின் பங்கு பின்னிப்பிணைந்து கிடக்கிறது. பெண்ணின் கருவூலத்தை மையமாகக் கொண்டே இந்தக் கருத்து நிலை எழுகிறது. பெண்ணின் உயிர்ச் சிருஷ்டிப்பு சக்தி, குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்க்கும் உடலாற்றல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஆண்களை விட வேறுபட்டதான ஆளுமைப் பண்புகள் பெண்களுக்கு இருப்பதாகக் கருதப்படுகிறது. உடற்கூற்று ரீதியாக பலவீனமானவர்கள் என்பதாலும், குழந்தைகளைப் பெற்று வளர்ப்பவர்கள் என்பதாலும், பெண்கள் இயல்பாகவே இரக்கமானவர்கள், மென்மையானவர்கள், பலவீனமானவர்கள், பணிவானவர்கள் என்ற கருத்து நிலை தோன்றியிருக்கிறது. இந்தக் கருத்து நிலையின் அடிப்படையில் பெண்களுக்கு ஆண்களின்

பாதுகாப்பு அவசியமெனக் கொள்ளப்படுகிறது. பெண்களின் இனவிருத்திப் பங்குடன் தொடர்புடையதாக இன்னொரு கருத்தும் நிலவுகிறது. அதாவது, பெண்கள் மென்மையானவர்கள், பலவீனமானவர்கள் என்பதால் பிள்ளைப் பெறுவும், பிள்ளைப் பராமரிப்பும், வீட்டு வேலையுமே பெண்களுக்கு உகந்த பங்காகக் கருதப்படுகிறது. ஆண் என்றும், பெண் என்றும், 'ஆண்மை' என்றும் 'பெண்மை' என்றும் எழுந்துள்ள கருத்து நிலையின் அடிப்படையில் ஆணுக்கான வேலை, பெண்ணுக்கான வேலை என்ற பாகுபாடு தோன்றியுள்ளது. ஆண் பெண் என்ற பாலியல் அடிப்படையில் பெண்களதும் ஆண்களதும் சமூகப் பங்குகளை வரையறுக்கும் குறுகிய கண்ணோட்டத்திற்கு சவால்விடும் மானிடவியல், சமூகவியல் ஆய்வுகள் நிறையவுண்டு (7) இங்கு, இந்த நூலில் இந்த ஆய்வுகள் பற்றிய கருத்துகளை விளக்கிச் சொல்வது எமது நோக்கமல்ல. தமிழ் சமூகத்தில், 'ஆண்மை', 'பெண்மை' என்ற கருத்துருவத்தின் அடிப்படையில் எழுந்த சமூகப் பங்குகளை ஆராய்ந்து, சீதன நடைமுறையை நியாயப்படுத்துவதற்கு, இவை எவ்விதம் பயன்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குவதே எமது நோக்கம்.

தாய்மைக்கு பெரும் மதிப்பு அளிக்கப்படுவதாகவும் பிள்ளைகளைப பராமரிக்கும் பெண்களின் பங்கு சமூக வாழ்வுக்கு அவசியமானதென்றும் சிலர் வாதிடலாம். உயிரியல் ரீதியானதும் சமூகரீதியானதும் தமது பங்குகளை செவ்வனே செய்வதற்கு பெண்களுக்கு பராமரிப்பும் பாதுகாப்பும் வழங்குவது ஆண்களின் கடமை என்றும் வேறு சிலர் வாதத்தை முன்வைக்கலாம். இவை எல்லாம் பண்டைய தமிழ் இலக்கியங்களில் சொல்லப்படும் கற்பனாவாதக் கருத்துகளாகும். இப்படியான பார்வை சமூக நிதர்சனத்தைப் பிரதிபலிப்பதாக இல்லை. பெண்களது தாய்மைக்கும், பிள்ளை பராமரிப்பு பங்கிற்கும் சமூகம் மகத்துவம் அளிப்பதாயின் பெண்களுக்கு திருமணம் ஒழுங்குசெய்வது இத்தகைய சிக்கலான, கடினமான விடயமாக உருவாகியிருப்பது ஏன்? பெண்கள் வாயிலாகவே படைத்தல் என்ற அற்புதம் நிகழ்வதாகக் கருதி, சந்ததி விருத்திற்கு மகத்துவம் அளிக்கப்படுவதாயின், பெண்களுக்கு சமூகத்தில் விசேட கௌரவமும் மதிப்பும் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். உண்மையில் இப்படியானதொரு மதிப்பு இருந்தால் பெண்களின் திருமணம் சிக்கலானதாக அமையாது. அத்துடன் திருமணச் சந்தையில் பேரம்பேசப்படும் ஒரு பண்டமாகவும் அவள் மாறியிருக்க முடியாது. மாறாக, பெண்களின் தாய்மை, பிள்ளைப் பராமரிப்பு போன்ற பங்குகளைக் காரணம்காட்டியே சீதனக் கோரிக்கைகள் நியாயப்படுத்தப்படுகின்றன. திருமணமாகிய பெண்கள் குடும்பத்திற்கு வருமானம் தேடிக்கொடுக்கும் ஆக்கமான தொழிலில் ஈடுபடமுடியாது என்ற கருத்தே மேலோங்கி நிற்கிறது. எனவே, பெண்கள் திருமணம் செய்யும் வேளையில், ஒரு புதிய குடும்பத்தை அமைப்பதற்காக அவர்களே மூலதனமும் நிதியுதவியும் செய்யவேண்டும் என்ற கருத்து பரவலாக இருந்துவருகிறது. இது சீதனத்தை நியாயப்படுத்துவதற்காக முன்வைக்கப்படும் தவறான வாதமாகும். இந்தப் பிரச்சினைபற்றி இனி விபரமாகப் பார்ப்போம்.

(தொடரும்)

உசாத்துணை.

7. *SEE. OAKLEY. A. Sex, Gender and Society, Tempel Smith, 1982.*



கண்டம் மாறிய நண்பனுக்கு
தாயகத்திலிருந்தொரு கடிதம்

# சங்காரம் முடிந்த கையோடு...

இன்னும் சாப்பிடவில்லை. மழையில் நனைந்து இப்போதுதான் வந்தேன். கடும்மழை. குடை இருந்தது தான் பிடிக்க மனமில்லை. மழையில் நனைந்தே வரவேண்டுமென்ற சந்தோசம். சந்தோசத்தால் பசிக்கவும் இல்லை.

அன்புள்ள சிறி,

உன்னுடைய கடிதங்கள் இரண்டுக்குமான பதிலை ஒன்றாக முந்தநாள் எழுதி அனுப்பி விட்டேன். இன்று, நெஞ்சுக்குள் பொங்கிப் பொங்கி வரும் மகிழ்ச்சியை, ஊரெல்லாம் நிறைந்திருக்கும் சந்தோசத்தை உனக்கு தந்து விட வேண்டுமென்ற தவிப்பில் இதை எழுதுகின்றேன். நண்பனே! நேற்றைக்கும் இன்றைக்குமாக இரண்டு விமானங்கள் இங்கே சுட்டுவீழ்த்தப்பட்டன. இந்தச் செய்தியை எந்த வானொலியோ அல்லது யாராவது நண்பனொருவன் தொலைபேசியில் தெரிவிக்கும் போதோ நீ ஆச்சரியப்படுவாய் நம்புவதா, விடுவதா என்று கூட அதிசயமாக இருக்கும் உனக்கு. ஆனால் சத்தியமாக விமானங்களின் கதை முடிந்தது. அவை சுடப்பட்டு நொருங்கியதாகவே உண்மைச் சரித்திரம் சொல்கிறது. இங்கே எல்லோருக்கும் ஆனந்தம். உனக்கும் சந்தோசமாகவிருக்கும்.

யாருக்கும் ஞாபகம் மறவாத, பீப்பாக் குண்டுகளை போடும் 'அவ்ரோ' ப்பிளேன்களே அழிந்தவை. ஒன்றிற்குப் பின்னால் மற்றதாக நாளுக்கொன்றாக இரண்டும் வீழ்ந்தன. சனங்கள் செட்டை முளைத்துப் பறக்கின்றார்கள். வானத்தில் தெல்லுமாறித்திரிந்த எமகிங்கரர்கள் கூண்டோடழிந்தாரே! என்ற மகிழ்ச்சி எல்லோருக்கும். செல்லத்துரை மாமாவுக்கு புழுகம் சொல்லிமாளாது. தான் சொல்லி வந்தது இப்ப நடந்திருக்குதாம். நீ இங்கே இருக்கும்போது, 'பாருங்கள் புலிகள் பிளேனை விழுத்தேக்கை அதுக்குப்பிறகு சிங்களப்படையள் படுறபாட்டை' என்று அவர் அடிக்கடி சொல்வது ஞாபகமிருக்கும். பாக்கியம் அன்ரி, தான் இனிச் செத்தாலும் பரவாயில்லையாம். பிறந்த பேறைப்பெற்ற திருப்தி 'பிளேன்' கள் எரியேக்கை பார்த்தது எண்டு ஒரு சந்தோசம். இப்படி இப்படி ஊருக்குள்ள சின்னன் பெரிசுகள் என்றில்லாமல் எல்லோருடைய கதையும் இதுதான் வாசிகசாலையடியில் நான் வரும்போது மழையில் நனைந்தபடி சனம் கூடியிருந்தது. மழை பெய்கிறதுகூட மறந்த மகிழ்ச்சியடா.

எனக்கு எதை எப்படி எழுதுகிறதென்று தெரியாத தத்தளிப்பு. நீ இங்கே இருக்காமல் போய்விட்டாய். எவ்வளவு கவலை? நீயும் இங்கே இருக்காது விட்டுட்டுப் போனதற்காக இப்போது நிறையக் கவலைப்படுவாய்.

முந்தி நாங்கள் அனுபவித்த அந்தக் காட்சிகளை??...... நாங்கள் ஓட ஓட கரந்தாய்க்குளத்துக்குப் பின்னால் இருந்த தென்னங்காணிக்குள்ள எத்தனை பீப்பாக்

களை தள்ளிய இரணியன்கள். எங்கட பள்ளிக்கூடக் கட்டிடத்தையும் அழிச்சது கள் இந்தப் பீப்பாக்குண்டுகள்தானே? அன்றைக்கு நாங்கள் பட்டபாடு. ஒவ்வொரு பீப்பாவும் ஆடி ஆடிவர அதைப் பார்த்த படி விலகி விலகி நாங்கள் ஓடின ஓட்டம். எத்தனை தென்னைகளை அழித்தார்கள்? பாவியள், செல்லத்தம்பி அம்மானின்ர ஆறேழு மாடுகள் எப்படிச் சிதறிக் கிடந் ததுகள்? எவ்வளவு பெடியளை இப்படிப் பீப்பாவை உருட்டி அழித்திருப்பாங் கள். இப்ப, கண்ணுக்கு முன்னால் கூண் டோடு மாண்ட காட்சி. .....

முதல்நாள் பலாலியில் இருந்து கொழும்புக்கெனப் போன 'பிளேன்' (நாவற் குழிக்கு மேல் என்று நினைக்கிறேன்) வானத்திலேயே தீப்பிடித்தது. சனமெல் லாம் போட்டது போட்டபடி நிண்டு கூத் தாடிச்சுதுகள். ஏதோ என்ர அதிஸ்டம் நானும் பார்க்கக் கிடைத்தது. எரிந்து கொண்டு போன 'பிளேன்' திரும்பி மெல்ல, மெதுவாக பலாலிக்கு கிட்டவாக வரதொப் பெண்டு விழுந்து தன்னுடைய கதையை முடிச்சுது.

மற்றது, அடுத்தநாள் கொழும்பிலி ருந்து பலாலிக்கு வரும்போது அடிபட்டு திமுண்டு புகைச்சுக் கொண்டு போய் நிலா வரையுக்கை விழுந்தது. சனங்கள் துள்ளிக் குதிக்குதுகளடா. இருக்காதா? எமகிங்க ரர்கள் அழிந்தால் உலகம் விடிந்தமாதிரித் தானே?

எத்தனை தடவைகள் அலைக்கழித்து இந்தப் பறவைகள் எங்கள், நிணந்தேடின? எத்தனை உயிர்களைக் குடித்தெழுந்தன?

எல்லாம் காலமாற்றந்தான். புலிகளின் ஆற்றலை இப்ப ஊருலகம் எல்லாம் அதி கமாக அறிஞ்சுவருகிறது. சிறிலங்கா அர சாங்கத்தின் பொய்யும் புரட்டும், திண் டாட்டமும் எல்லோருக்கும் விளங்கிவிட் டது. இனித்தான் சந்திரிகா அரசுக்கும் ஞானம் வெளிக்கும்.

எங்களின் விடுதலைப் போராட்டத்தின் பெறுமானத்தை உலகம் இன்னும் விளங் காமல் இருக்கிறது என்ற உன்கவலை இனி மெல்ல மெல்ல மாறும் என நம்புகி றேன். எங்கள் விடுதலை நெருங்கி வரு வதை இங்கே எல்லோரும் நன்றாக உணர் கின்றார்கள்.

உண்மையில் நீ ஒரு துர்பாக்கியசாலி தான் என்பதை இப்போது நம்புகிறேன். முன்பு நீ சொல்லும் போது நான் அப்படி யல்ல என்று சொன்னேன். விடுதலைப்போர் நடக்கும்போது அதனுடன் நெருங்கி நிற் காத மனிதன் முழுமையற்றவன் என்பது எவ்வளவோ உண்மைதான். இங்கே நீயில் லையென்றாலும் நம் விடுதலைக்காக நீ யிருக்கும் நாட்டிலிருந்தே உழை.

பசிக்கிறது நண்பனே!

விமானங்கள் விழுந்த மகிழ்ச்சியின் ஆரவாரத்தில் இன்னும் சமையல் முடிய வில்லை.

நானும் சேர்ந்தே சமைக்க வேண்டும்.

நல்லது. அதிகமதிகமான புதினங்களு டன் சந்திப்போம்.

நன்றி.

அன்புடன்,
பிரகலாத ஹேமந்த்.
30.04.1995.

மதிலோர மின்கம்பத்தின்
மின்கம்பிகளைத் தொட்டபடி
வீதிக்கு கிட்டவாய்...
விசாலித்த (மா) மரம்.
"தொட்டால் அடிக்கும்" என்று
முன்பெல்லாம் சொல்லும் மின்கம்பிகள்
"தொட்டால் கடிக்கும்" என்பது போல்
மாட்டு வாலாய்த் தொங்குகையிலும்
கட்டெறும்பும் கடியெறும்பும் அதில்.
வீட்டுக்குள் மின்குமிழ்களின்
கூட்டுக்குள் பூஞ்சணங்கள்.
பாட்டு பெரிய "செற்" றில்

☐ வேலணையூர் சுரேஷ்

# மதிலோர(மா)மரம் அழுவது ஏன்?

போட்டுக் கேட்டுப் பலநாட்கள்.
குளிர்சாதனப் பெட்டிக்குள்
குழந்தையின் தலையணையும் பால்குப்பியும்.
குப்பி விளக்கில் கொப்பி விரித்து
தவணைப் பரீட்சைக்காய் தங்கையின் படிப்பு.
அப்பிப் படிந்த இருளுக்குள்
சிறு ஒளிக் கீற்றில் நின்றபடி
அப்பா தன் வியாபாரக் கணக்கெடுப்பு.
எப்போது இந்த நிலை மாறும்?
படர்ந்த தூசி விலத்தி மீண்டுமிவற்றை
சுடர வைப்பது எப்போது?
குளிர வைத்துக் குளிர்பானம்
களைதீரக் குடிக்கும் காலம் வருமா?
வெள்ளைப் புறாவின் சிறகசைப்பில் இங்கே
உள்ளதெல்லாம் உயிர்க்குமென்று யார்சொன்னது?

"மின்சாரம் இன்று மின்நேரம்"
என்றதோர் அங்கலாய்ப்பில்
வந்தென் மேனியை வருடிச் சென்றவனே
வா ..?
நீ அறுத்தெறிந்தது
மின்கம்பியில் முட்டிய இலை தண்டுகளை!
ஆனால் அறுபட்டதோ உன் கனவும் கற்பனையும்.
நானிப்போ அழுவதெல்லாம்
என்னை நினைத்தல்ல !
உன் போன்ற தலைதெறித்த
மனிதர்களை எண்ணித் தான்!
ஆனால் நானோ
"மீண்டும் மீண்டும் துளிர்க்கின்றேன்!" □□

---


மணமும் சுவையுந்தான்

அரிசியின் தரமென்றால்

நீங்கள் எங்கும் அலையத் தேவையில்லை.

**சரஸ்வதிக்கு**

நேரே வாருங்கள்......

எவ்வகைத் தரமான அரிசியும்

உங்கள் கைகளை வந்தடையும்.

**சரஸ்வதி அரிசி ஆலை**

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

காலத்திற்கேற்ற
நவீன டிஸைன்களிலான

- அணிகலன்கள்
- அழகு சாதனப் பொருட்கள்
- நவீன பா(B)க் வகைகள்
- பாடசாலை உபகரணங்கள்
- பாதணி வகைகள்

அனைத்தும் நிதான
விலையில்

கிடைக்கும்
ஒரே இடம்

அலோமாஸ்

பஸ் நிலையம் முன்பாக
சுன்னாகம்

உயிர் வாழ
உணவு தேவை

அந்த உணவு
சுவையானதாக

இருந்தால்தான்
வயிறார உண்ணலாம்.

உங்கள் உணவுகளைச்
சுவையாகத் தருகிறது.

சரஸ்வதி
அரைக்கும் ஆலை

- மிளகாய்
- மாவு
- தானியங்கள்

யாவையும் திரித்து;
அரைத்து

வழங்க நாடுங்கள்.

சரஸ்வதி
அரைக்கும்
ஆலை

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மனோ அம்பிஸ்சுக்கு வாருங்கள்.

- அழகுசாதனப் பொருட்கள்
- கிளாஸ் வகைகள்
- பிளாஸ்ரிக் சாமான்கள்
- பாடசாலை உபகரணங்கள்

கண்டு வியந்திடுங்கள்

வாங்கி, உங்கள் தேவைகளை நிறைவாக்குங்கள்.

மனோ அம்பிஸ்

அழகு சாதன விற்பனைக் களஞ்சியம்

பிரதான வீதி,

மானிப்பாய்.

சகல ஆங்கில மருந்து வகைகளின்

விற்பனையாளர்கள்

அன்பான பேச்சு

கனிவான உபசரிப்பு

உங்கள் அவசியம் தெரிந்து

எமது சேவை தொடர்கிறது

என்றும் நாடவேண்டியது:-

பரணி மருந்தகம்

456, கேணல் கிட்டுசாலை,

(மருத்துவமனை வீதி.)

யாழ்ப்பாணம்.